Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
(சி-068)
☎ 021-225170

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 04 (10.11.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 41

# புலிகள் - இராணுவ உயர் தளபதிகள்

# இன்று ஓமந்தையில் முக்கிய சந்திப்பு!

## பாதுகாப்பு விவகாரங்கள் பற்றி ஆராய்வு

(வவுனியா)


கருணா

**பாதுகாப்பு விவகாரங்களுக்கான உபகுழுவின் முதலாவது கூட்டம் இன்று ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. காலை பத்து மணியளவில் ஆரம்பமாகும் இக்கூட்டத்தில் புலிகள் மற்றும் அரசு தரப்புக்களில் இருந்து சிரேஷ்ட தளபதிகள் பலர் பங்குபற்றுகின்றனர்.**


ஒஸ்ரின்

இக்கூட்டத்தில் புலிகள் தரப்பில் மூத்த தளபதி கேணல் கருணா தலைமையில், தளபதி கேணல் பதுமன், தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் ஜெயம், மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர்களான எழிலன், இளம்பருதி, திலக், கௌசல்யன் மற்றும் கடற்புலிகளின் தளபதி ஒருவருமாக மொத்தம் ஒன்பது பேர் கொண்ட குழு பங்குபற்றும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தலைமையில் மேஜர் ஜெனரல்களான சாந்த கொட்டேகொட, சரத் பொன்சேகா, பாலசூரிய, வீரசேகர, கல்முனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி மஜித் மற்றும் விமானப்படையைச் சேர்ந்த கப்டன் ஒருவர் உட்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)


## ஈ.பி.டி.பி. உறுப்பினர் மர்ம முறையில் மரணம்

### சக உறுப்பினரால் தாக்கப்பட்ட பின் சம்பவம்

(அனலைதீவு)

அனலைதீவில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்று மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது-

அனலைதீவைச் சேர்ந்த புஷ்பராஜா அல்லது யோகராசா மைக்கல் (வயது 29) என்ற இந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று முன்தினம், ஈ.பி.டி.பி.


மரணமானவரின் சடலத்தைப் படத்தில் காணலாம்.

முகாமில் வைத்து சக உறுப்பினர்களால் தாக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் அம்முகாமை விட்டுத் தப்பி வெளியே வந்த இவர் தனது காதலி வீட்டில் தஞ்சமடைந்துள்ளார்.

தஞ்சமடைந்த மேற்படி நபரை அவரின் காதலி இன்னுமோர் வீட்டிற்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதரகத்தில் தமிழ் பேசத்தெரிந்தோர் நியமனம்

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் - தமிழ் பேசத் தெரிந்த அமெரிக்க நாட்டவர்கள் இருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தமிழ்மக்களுடனான சந்திப்புக்கள், கலந்தாலோசனைகளுக்கு கூடிய கவனம் செலுத்துவதற்காக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட விருப்பதாக தெரியவருகின்றது.

ஏற்கனவே - அமெரிக்கத் தூதரகத்தில் தமிழ் பேசத் தெரிந்த அமெரிக்கர் ஒருவரும் சிங்களம் பேசத் தெரிந்த அமெரிக்கர் ஒருவரும் கடைமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.


### விண்ணாணம் விநாசியர்



தமிழ் இப்ப எவரெவருக்கெல்லாம் அவசியமாயிற்றுது பார்த்தியளே...

## சமாதானப் பேச்சுகளுக்கு அமெரிக்கா வலுத்த ஆதரவு

### அமைச்சர் மிலிந்தவிடம் ஆர்மிரேஜ்




அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான பேச்சுக்களை அமெரிக்கா வலுவாக ஆதரிக்கின்றது என அமெரிக்கப் பிரதி வெளியுறவு அமைச்சர் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றிருந்த அமைச்சர் மிலிந்த மொறகொடவை அவர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியிருந்தார். இதன் போதே ஆர்மிரேஜ் இக் கருத்தை வெளியிட்டார்.

அமெரிக்க பிரதி ராஜாங்க செயலர் கிறிஸ்டினா ரொக்காவையும அமைச்சர் மிலிந்த சந்தித்துப் பேசியுள்ளார். அத்துடன், உலக வங்கியின் முகாமையாளர் சிங் மான் சியாங்கையும் இவர் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரியவருகிறது.

### விபத்தில் சிக்கிய சைக்கிளோட்டி படுகாயம்

நெல்லியடி பருத்தித்துறை வீதியில் நேற்று நடைபெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று நண்பகல் ஒரு மணியளவில் லொறியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதுப்பட்ட வேளையில் இடையில் சைக்கிள் ஒன்று சிக்கிக் கொண்டது. இதில் கரவெட்டியைச் சேர்ந்த ப.திருமுருகன் (வயது 19) என்பவர் படுகாயமடைந்தார்.

## நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அம்பாறையில் மக்கள் பேரணி

### செவ்வாயன்று நடத்த பொது அமைப்புக்கள் ஏற்பாடு

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் இப்பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு பற்றவுள்ளனர்.

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் இக்கண்டனப் பேரணி, கல்முனை நகரைச் சென்றடைந்து, மீண்டும் அங்கிருந்து கல்முனை பிரதேச செயலகத்துக்குச் சென்று அங்கு கண்டன மகஜர் கையளிக்கப்படவுள்ளது. இக்கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகளை அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த சில தினங்களில் மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தலைவர் பிரபாகரனுக்கு எதிரான உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து பெருமெடுப்பிலான மக்கள் பங்குகொண்ட பேரணிகள் நடைபெற்றமை தெரிந்ததே. (08)

## 285 பட்டதாரிகளுக்கு அடுத்தவாரம் நிர்வாக சேவையில் நியமனம்!

(நமது நிருபர்)

இலங்கை நிர்வாக சேவையில் 285 பட்டதாரிகளுக்கு அடுத்த வாரம் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சையில் தோற்றித் தெரிவு செய்யப்பட்டோரில் முதற் கட்டமாக 285 பேருக்கே அரச நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. எஞ்சியோருக்கும் விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அரச பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அரசாங்க சேவை வெற்றிடங்களை நிரப்பும்போது தகுதிவாய்ந்தவர்களுக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கொழும்பின் பாதுகாப்பை உளவறிந்ததாக கைதானவர் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கொழும்பு நகரின் பாதுகாப்புத் தொடர்பாகவும், இராணுவ, பொலிஸ் சோதனை நிலையங்கள் தொடர்பாகவும் தகவல்களை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வி.விநாயகமூர்த்தி என்ற இளை

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB விமான சேவை
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் உள்ளது.
J/FT/P - 021-2223916, 0777-801038
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

# இரண்டாம் கட்டப் பேச்சுகள் நம்பிக்கையீனம் தருகிறது

## ஈ.பி.டி.பி.அறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தாய்லாந்தில் புலிகளுடன் நடத்திய முதற்சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் கட்டம் மக்கள் மத்தியில் கேள்விக்குறிகளையும், நம்பிக்கையீனங்களையுமே தோற்றுவித்துள்ளது கவலைக்குரியதாகும் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் என ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்-

இனப்பிரச்சினைக்கு நியாயமான-நிரந்தரமான-கௌரவமான தீர்வு இயன்றளவு விரைவில் காணப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும். புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது முதல் இன்று வரையான புலிகளின் செயற்பாடுகள் காலத்தை இழுத்தடிப்பதாகவே உள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாடு குறித்துக் கேள்வி எழுப்பும் புலிகள், மற்றொரு தடவை நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவது குறித்துப் பேசுவதும் காலம் கடத்தும் மற்றொரு முயற்சி போலவே தென்படுகிறது. வட-கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்துவதை விரும்பாத புலிகள் பாராளுமன்றத் தேர்தல் குறித்துப் பேசுவது விந்தையானது.

அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் பேசாமல் நாளாந்தப் பிரச்சினைகள் குறித்துப் பேசி பேச்சுவார்த்தைகளைத் தொடர்வது போலக் காட்டிக் கொள்வது மக்களின் நம்பிக்கையைச் சிதறச் செய்வதாகவுள்ளது.

வட-கிழக்கு மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பை இடைக்கால நிர்வாகம் மூலம் பெற்றுக்கொள்ளப் போவதாக ஆரம்பத்தில் கூறி வந்தனர். பின்னர் கூட்டுச் செயலணி என்றும், இப்போது அதுவும் இல்லாத உப-குழு ஒன்று பற்றிப் பேசுகின்றனர். இவை நடைமுறைக்கு வருமா என்பது கேள்விக்கு உள்ளாகியுள்ளது.

இந்த வேளை பேச்சுக்களும் தாய்லாந்திலிருந்து பின் ஒஸ்லோவுக்கும் அங்கிருந்து டோக்கியோவுக்கும் இடம்பெயர்கின்றது. இதேவேளை புலிகள் மேற்கொள்ளும் சட்டவிரோத நிதி அறவீடுகள், கப்பம் வசூலிப்புக்கள் தொடர்வதோடு, பலவந்த ஆட்சேர்ப்புக்களும், புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்களும் தடையின்றி நீள்கின்றன.

இந்த அம்சங்கள் ஒவ்வொன்றையும் நிதானமாகச் சீர்தூக்கிப் பார்க்கும்போது எவருக்கும் நம்பிக்கையீனம் தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். ஆகையால் இன்றைய யுத்தமற்ற நிலை தொடர்ந்தும் பேணப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு இயன்றளவில் கௌரவமான அரசியல் தீர்வு காணப்படுவதை உத்தரவாதப்படுத்துவதற்காக ஜனநாயகம், பன்மைத்துவம் மற்றும் மனித உரிமைகள் பேணப்படுவதை உத்தரவாதப்படுத்த வெளிப்படையான முயற்சிகள் தேவை என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரி.ரி.என். 'பாடும் ஸ்வரம்' தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வீரசிங்க மண்டபத்தில் அண்மையில் பிரெஞ் ரி.ரி.என் . தொலைக்காட்சி நிறுவனம் நடாத்திய பாடும் ஸ்வரங்கள் நிகழ்ச்சியில் தெரிவானவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இவர்கள் மேற்கொண்டு விபரங்களை 021-2223919 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவானோர் விபரம் வருமாறு:- ரவிச்சந்திரன் ஆறுமுகம், நித்தியாணந்தன், சத்தியராச், கணேஸ்வரி, நவநீதன், அசோக்குமார், செல்வசலமன், ஜனனி, தீவானா, திவ்வியாஞ்சலி, கல்பனா, சிவகொழுந்து, தவபபிரியா, இசை அமுதன், நந்தக்குமாரி, மேரி நவரெட்ணம், சுரசாகித்தியன், எட்வேட் ராசநாயகன், சிவசக்திகரன், கேதீஸ்வரன், ரமணன், தீபா, குகபரன், குமரேஸ், சிவநேசன், ஜென்சன், ரவீந்திரன், கிருபாகரன், நிவேதன், தர்சினி, செல்வராஜா, நயீவன், யேக்குமாரி, தர்மிளா, தினேஸ்சங்கர், நஞ்சன், தீபறயினா, பத்மறாயினி, கார்த்திகா, ஜேறொகான், குணசிங்கம், நிறஞ்சன், டயின்சியா, ஜேபாரதி, சிவசத்தியமோகன், சிவகரன், சுரேஸ்நேசன், ஜேகாந்தன், கநூசியஸ், தாட்சாயினி, சீத்தாராமன், சிவலிங்கம், ஜெநின்ஸரலின், பிரசாத், நிரோசன், சத்தியசீலன், வின்சன், கதிர்காமநாதன், கில்ட்டன், டேமியன், வரதராசா, ஜசோதரன், ரகு, மோகன், உபேந்திரன், சிலோசினி, கணேஸ்வரி, நவநீதன், தீபா, அரியசிவம், கிருபாகரன், டினேஸ் சங்கர், வெஜின் விஜித்தா, தர்மேந்திரா, கிருஸ்ணாணந்தா, விஸ்வச்சந்திரன், விமலனாயா, சத்தியசீலன், தவராஜன் சண்முகராஜா.

# இன்றைய நாள் இனிய நாள்


**10-11-2002 - ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தெய்வபக்தி, தெய்வசேவையில் மதிப்பு, சமய அறிஞர் உறவு, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம். |
| இடபம் | :- தேகசுகம் நன்று, தெய்வதரிசனம், பிதாவுடன் மகிழ்ச்சி, சமயநூல் கற்றல், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| மிதுனம் | :- தேகசுகம் சமம், பணவரவு குறைவு, தொழில் முன்னேற்றம் சமம், கல்வி முன்னேற்றம். |
| கர்க்கடகம் | :- தெய்வபக்தி, வீட்டில் மனஅமைதி, மங்கள வைபவங்களில் பங்கு, சிலருக்கு ஆடையாபரண மகிழ்ச்சி, கௌரவம், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| சிங்கம் | :- தெய்வபக்தி, மனஅமைதி, எடுத்த காரியம் வெற்றி, மங்கள வைபவங்களில் பங்கு, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| கன்னி | :- தெய்வ சேவையில் பங்கு, மனஅமைதி, புத்திரசுகம், மங்கள வைபவங்களில் பங்கு, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
**இ.வெங்கடேச ஐயர்.**

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகக் குறைவு, மாதா தேகசுகக் குறைவு, உறவினரால் செலவு, வாகனச்செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| விருச்சிகம் | :- தெய்வ பக்தி, மன அமைதி, எடுத்த காரியம் வெற்றி, மங்கள வைபவங்களில் பங்கு, இனசன மகிழ்ச்சி, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| தனு | :- தேகசுகம் சமம், பணவரவு சமம், பெண்கள் மூலம் வாக்குவாதம் வரலாம், மௌனம் சாதிப்பது நன்று, கல்வி முன்னேற்றம். |
| மகரம் | :- தெய்வ பக்தி, மனஅமைதி, சிலருக்கு மங்கள வைபவங்களில் பங்கு, ஆடையாபரண மகிழ்ச்சி, இனசன மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| கும்பம் | :- தேகசுகக் குறைவு, கர்வத்தினால் செலவு, எடுத்த காரியம் தடை, அயலவர்களுடன் மௌனம் சாதிப்பது நன்று, மனச்சஞ்சலம், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| மீனம் | :- தெய்வ பக்தி, மன அமைதி, சமய அறிஞர் உறவு, மங்கள வைபவங்களில் பங்கு, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும். |

MURTHY ADVERTISING SERVICE 2789
❖ யாழ். FM ல் விளம்பரம் செய்திட
❖ யாழ்-கொழும்பு பிரயாண ஒழுங்கு செய்திட
❖ ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு ஆட்டோ அமர்த்திட
மூர்த்தி விளம்பர சேவை
தேவி அச்சக ஒழுங்கை
யாழ்ப்பாணம்
T.P-2789



குறைந்த கட்டணத்தில், தரமான வடிவமைப்பில், விளம்பரம் செய்யுங்கள்... நமது ஈழநாட்டில்!

T.V, டெக், CD, VCD என்பவற்றை துரித கெதியில் திருத்தம் செய்து கொள்ளவும், உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்.
A.K.ELECTRONIC
254, இலுப்பையடிசந்தி, யாழ்ப்பாணம் (சி-169)

உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நமது ஈழநாட்டில்!
முற்றிலும் இலவசமாக!!
உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் மூன்றினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.
வாழ்க வளமுடன்!
சிறாரின் பெயர் :........................
முகவரி :........................
பிறந்த ஆண்டு :........................



கூப்பன்கள் மூன்றும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
........................
பெற்றார் ஒப்பம்

ஜெ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெசல்
சில்வர் ஸ்ரீக்
சிக்கன் புரியாணி
ரூபா 125/=
ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி. (சி-163)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00
சரத்குமார். ரோஜா. நடித்த
சின்னத்துரை
சனி. ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
"FINAL FIGHT"
(கராட்டிப் படம்) (சி-139)

ராஜா
யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-151)

❐ மங்களகரமான நிகழ்வுகளை தத்ரூபமாக வீடியோ படம் பிடிக்க வேண்டுமா?
❐ வர்ணப் புகைப்படங்களை பிடிக்க வேண்டுமா?
❐ கொம்பக்ட் டிஸ்க் மூலம் அனைத்துப் பாடல்களையும் ஓடியோ கசட்டில் பதிவு செய்ய வேண்டுமா?
இவை அனைத்தையும் ஓரே இடத்தில் பெற்றிட
நீங்கள் நாட வேண்டிய ஓரே நிறுவனம்
சுப்பரோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்





206, ஜம்பட்டா வீதி, கொழும்பு-13
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இதோ! யாழ் நகரில்
yarl beach in
யாழ் பீச் இன்



✣ உல்லாசப் பயணிகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்
✣ 35 வருடகால அனுபவம் வாய்ந்தோரின் நிர்வாகமும், சேவையும்
✣ இயற்கையான சூழலில் விருந்துபசாரம், திருமண கொண்டாட்டங்கள்
✣ மூன்று நேர உணவு வசதி
✣ வெவ்வேறான குளியலறையுடன் கூடிய தங்குமிட வசதி
இத்துடன் அதிசுவையான
ஈழ மக்களின் தேசிய பானம் ~ கூழ் (Sunday Special)
(சைவம், அசைவம்)
சுவைத்திடலாம். (சி\162)
N0 8, Old Park Road, Jaffna.
T.P. 0777 - 242831
உரிமையாளர், S.சிலுவைராசா.

- மீளக்குடியமர உரிய பதில் தரப்படவில்லை -

# அரியாலை - கொழும்புத்துறை மக்கள் ஏ-9 வீதியை மறிப்பதற்குத் தீர்மானம்!

(அரியாலை)

அரியாலை - கொழும்புத் துறைப் பகுதிகளில் பொதுமக்களின் வீடுகள் மற்றும் பொது இடங்களில் தங்கியுள்ள படையினரை வெளியேற்றித் தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி இப்பிரதேச மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜருக்கு உரிய பதில் அனுப்பப்படாததால் வீதி மறிப்புப் போராட்டத்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி கொழும்புத்துறை, அரியாலைப் பகுதி மக்கள் இந்த மகஜரை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகம், மனித உரிமை ஆணைக்குழு, அரச அதிபர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருக்கு அனுப்பியிருந்தனர். 7ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு உரிய பதில் வழங்கப்படாவிட்டால் வீதி மறிப்புப் போராட்டத்தை நடத்துவோம் என இம்மகஜரில் கூறப்பட்டிருந்த போதும் எவ்வித பதிலும் அனுப்பப் படவில்லை.

இதையடுத்து ஏற்பட்ட நிலைமையைத் தொடர்ந்து, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அரியாலை - கொழும்புத்துறை பொதுமக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் நடத்திய கூட்டத்திலேயே ஏ-9 வீதியை மறித்துப் போராட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்துக்கு இப்பகுதியிலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளன.

போராட்டம் நடத்துவதற்கு முனனோடியாக, படையினர் நிலை கொண்டுள்ள ஜே/96 பிரிவு கிராம மக்களுடனான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (55)

## கட்டுப்பாடு இழந்ததால் கடலுக்குள் பாய்ந்த வான்

(வண்ணை)

திக்கம் கடற்கரைவீதியால் சென்றவான் கட்டுப்பாடு இழந்த நிலையில் கடலுக்குள் பாய்ந்தது. இச்சம்பவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றி வரும் சேவையில் இந்த வான் ஈடுபட்டுவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த சி.சத்தியதாஸன் கைகள் முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(111), (23), (15)

## வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண இரண்டாம் கிளையின் வெள்ளி விழா நாளை காலை 8 மணிக்கு வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

- பிரித்தானிய பத்திரிகையாளர் போல் ஹரிஸ் -

# விஸா நடைமுறைகளுக்கு முரணாக உள்ளூர் ஊடகத்தில் கட்டுரை எழுதினார்!

- விசா மறுப்புக்கு வெளிவிவகார அமைச்சு விளக்கம் -

(கொழும்பு)

பிரித்தானியச் செய்தியாளர் போல் ஹரிஸின் விசாவை நீடிப்புச் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்தமைக்கான காரணங்களை விளக்கி வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

போல் ஹரிஸ் தனது விஸா விணணப்பத்தில் 3 மாதங்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருப்பதற்காக விண்ணபித்திருந்தார். ஆனால் இங்கு தங்கியிருப்பதற்கான காரணத்தை தெரிவிக்காத போதும் இவரது விசா விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு மட்டுமே இவர் கட்டுரைகளை எழுதுவதாக விண்ணபத்தில் குறிப்பிட்டிருந்த போதும், கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரி ஒன்றில் இவர் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். இது விசா நடைமுறைகளுக்கு முரணான செயலாகும்.

இதைவிட, இவர் தங்கியிருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு அண்மையில் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவு இயங்கிவருகிறது. இதைத் தமக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும், தம்மைக் கண்காணிப்பதற்கான அரசின் ஏற்பாடு என்றும் போல் ஹரிஸ் கூறியுள்ளார்.

இவற்றின் காரணமாகவே போல் ஹரிஸின் விசா நீடிப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசியல் மோதலில் காயமுற்ற பல்கலைக்கழக மாணவர் மரணம்!

(கொழும்பு நிருபர்)

ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் மாணவர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதல்களில் படுகாயமடைந்த மாணவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை மரணமானார்.

ஜே.வி.பி. மற்றும் அரச சார்பு மாணவர்கள் மத்தியில் இடம் பெற்ற இம்மோதல்களில் ஆறு மாணவர்கள் படுகாயமடைந்ததும் பல்கலைக்கழகச் சொத்துக்கள் சேதமுற்றதும் தெரிந்ததே. இதனால் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக கணினிக்கல்வி சீடா நிறுவனம் உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கணினிக்கல்வியை மேம்படுத்துவதற்காக “சீடா” நிறுவனம் விசேட உதவித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இவ்விடயம் குறித்து யாழ்.பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும், சீடா நிறுவனத்தின் அதிகாரிகளுக்குமிடையில் ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

மேற்படி விசேட உதவித்திட்டத்தின்படி யாழ்.பல்கலைக்கழக கணினிப் பிரிவுக்கு ஒரு தொகுதி புதிய கணினிகள் வழங்கப்படவுள்ளது. இப்புதிய தொகுதி கணினிகள் எடுத்துவரப்பட்டதும் இக்கணினிப் பிரிவின் திறன் பல மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)




யாழ்., பேராதனை பல்லைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களின் ஏற்பாட்டில் ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தகக் கண்காட்சியிலிருந்து... (படங்கள்:லிவிங்ஸ்டன்)

# நானாட்டானில் புதிய படைமுகாம் விலக்குமாறு மக்கள் முறைப்பாடு!

(வவுனியா நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட டானில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிதாக முகாமொன்றை அமைத்துள்ளது தொடர்பாக அப்பகுதி மக்களால் இலங்கைப் போர் நிறுத்தக் கண காணிப்புக் குழுவின் அலுவலகத்தில முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கு முன்னர் நானாட்டனில் படையினர் புதிதாக முகாமொன்றை அமைத்துள்ளனர். இது புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணான செயல் என அப்பகுதி மக்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இந்தப்படை முகாமை விலக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தாம் மாபெரும் போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கும் என்றும் இப்பகுதி மக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தாம் இதற்கு இரு நாட்களில் பதில் தருவதாக மக்களுக்குக் கண்காணிப்புக் குழுவினர் உறுதி வழங்கியுள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் கொழும்பில் நிபுணர்களுடன் ஆலோசனை!

- சட்டமா அதிபர், சட்டக்கல்லூரி அதிபர், சட்டபீடாதிபதி பங்கேற்பு -

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கபடவிருக்கும் சட்டபடம் தொடர்பாகக் கொழும்பில் உயர் மட்ட ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி சந்திபபுக்களில் பங்குபற்றுவதற்காக யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சிற்றம்பலம் விரைவில் கொழும்பு செல்லவுள்ளார்.

சட்டமா அதிபர் கமலசபேசன், கொழும்பு சட்டக்கல்லூரி அதிபர், மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடாதிபதி பேராசிரியர் செல்வக்குமரன் ஆகியோர் மேற்படி உயர் மட்டச் சந்திப்புக்களில் பங்குபற்றவுள்ளனர்.

இச்சந்திப்புக்களின்போது யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப் படவுள்ள சட்டபீடம் தொடர்பான ஆலோசனைகள் பல மட்டங்களில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. அத்துடன், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் சட்டக் கலவிக்கான பாடத்திட்டத்தை வரைவு செய்வதற்கும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து தீர்மானம் எடுப்பதற்காகவுமே மேற்படி உயர் மட்டச் சந்திப்புக்கள் நடைபெறவுள்ளது. (க)

# தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கு கடன் திட்டம்

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளின் வறிய குடும்பங்களுக்கு உதவுவதற்கென சுயமுயற்சிக்கடன் திட்டம் ஒன்றை அரசியற் கைதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

இத்திட்டத்தின் அடிப்டையில் மட்டக்களப்பிலிருந்து 12 குடும்பங்களுக்கும், யாழ்ப்பாணத்தில் மூன்று குடும்பங்களுக்கும், வவுனியாவிலிருந்து மூன்று குடும்பங்களுக்கும் தலா ஐயாயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சுயமுயற்சிக்கென வழங்கப்படும் இக் கடனுக்கு வட்டி அறவிடப்பட மாட்டாது. மாதாந்தம் நூறு ரூபா வீதம் இக்கடன் மீளளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியற் கைதிகளின் வறிய குடும்பங்களுக்கென வழங்கப்படும் இச் சுயமுயற்சி கடன் திட்டத்தின் கீழ் மேலும் இருபது குடும்பங்களுக்கு கடனுதவி வழங்கப்படவுள்ளது.

இக் கடன் திட்டத்திற்கு புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழர்கள் உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (03)

### நமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | - 4.56 |
| சுபஹ் | - 5.11 |
| உதயம் | - 6.30 |
| லுஹர் | - 12.26 |
| அஸர் | - 3.48 |
| மஃரிப் | - 6.20 |
| இஷா | - 7.32 |

# தென்மராட்சி குடிநீர் விநியோகத்துக்கு உலகவங்கி 15கோடி ரூபா ஒதுக்கீடு

தென்மராட்சியில் குடிநீர் விநியோகத் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு உலகவங்கி 15 கோடி ரூபாவை வழங்கும் என்று உலக வங்கியின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டிருந்த உலக வங்கிப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர், சாவகச்சேரி நகரசபையில் நடத்திய கூட்டத்திலேயே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நகரசபைத் தலைவர், செயலாளர், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துறைப் பொறுப்பாளர், பொதுமக்கள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகளும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் தமிழீழ விடு தலைப புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் பேசுகையில்-

“மக்களின் தேவைகளை அறிந்து அவர்களிடமிருந்து ஆலோசனை பெற்றுச் செயயததால், கடந்த காலத்தில் இவ்வாறு தீட்டப்பட்ட திட்டங்கள் எதுவும் மக்களை சென்றடையவில்லை” எனவும் தெரிவித்துள்ளார். (25)

# உள்ளூராட்சி ஊழியருக்கான் இடமாற்றப்பட்டியல் தயார்!

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் ஊழியர் இடமாற்றப்பட்டியல் சகல உள்ளூராட்சி அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்கள் ஜனவரி மாதம் 1ஆம் திகதி அமுலுக்கு வருகின்றது.

இடமாற்றங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கும், தொடர்ந்து 10 வருடங்களுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் கடமை புரிந்த அலுவலர்களுக்குமே இவ்விடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபையில் 18பேர் இடமாற்றம் பெறவுள்ளனர் என்றும் இவர்களில் 13 எழுதுவினைஞர்களும் 4 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (13)

# அரசாங்கம் - ஜனாதிபதி கயிறிழுப்பில் வெற்றியடையப்போவது யார்?

**தெற்குத் திசையினிலே.. கொழும்பிலிருந்து இந்திரஜித்**



கட்சிகளுக்குள் முரண்பாடுகள் நிலவுதாலும் நிலையில்லாத அரசாங்கத்தினாலும்-பொதுமக்களே அனைத்து சுமைகளையும் சுமந்து கொண்டிருக்கிறார்கள். இதுவே நாட்டின இன்றைய நிலைமை. சமாதான முனைப்புகள் முன்னர் எப்போதும் இல்லாதவாறு தீவிரமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன.

முன்னைய தென்னிலங்கை அரசியல் பகுதியில் - தேசிய அரசாங்கமா? கூட்டு அரசாங்கமா? அல்லது மாற்று அரசாங்கமா? இலங்கையில் அமையப் போகிறது? என ஆராய்ந்து பார்த்திருந்தோம். இப்போது நிலைமையைக் கருத்தில் கொள்வதனால் தேசிய அரசாங்க வாய்ப்பு நழுவிப் போய்க்கொண்டு இருக்கிறது என்றே சொல்லலாம். கூட்டு அரசாங்கம் என்ற நிலையும் பொதுஜன ஐக்கிய முன்னணியால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி சம பங்கான அமைச்சர்கள் என்ற வகையில் சமர்ப்பித்த பரிந்துரையையே பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிராகரித்துள்ளார்.

இவ்வாறான ஒரு நிலையில் மாற்று அரசாங்கம் என்ற முனைப்பை பொ.ஐ.மு.தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக ஐக்கிய தேசிய முன்னணி-அரசாங்கத்துக்குள் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை-பொ.ஐ.மு. இரகசியமாக சந்தித்து உரையாடி வருகிறது. இரண்டாவது கட்டமாக ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிரான தீவிர பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகிறது. மாற்று அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் முன்வரிசை உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியதாக ஏற்கனவே இந்தப் பத்தியில் கூறியிருந்தோம்.

அந்த முன்னெடுப்புப் போதியளவு சாதகத்தை ஏற்படுத்தாத நிலையில் ஐக்கிய தேசிய முன்னணிக்குள் அதிருப்திகளைக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பக்கம் பொதுஜன முன்னணியின் தீவிர பார்வை திரும்பியிருக்கிறது.

இதன் மாற்றுத் திருப்பமாகவே ஐக்கிய தேசிய முன்னணி துரிதமாக எட்டு அமைச்சர்களை நியமிப்பதற்கான பிரேரணையை ஜனாதிபதியின் முன்னிலையில் சமர்ப்பித்திருக்கிறது. இதிலிருந்து ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். பொது ஜன முன்னணியாரைத் தம் பக்கம் கொண்டுவர முயற்சித்ததோ அதில் முக்கியமானவர்களைத் தெரிவு செய்து பட்டியலை புதிய அமைச்சர்களாக நியமிக்கும்படி அரசாங்கம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கிறது. அதாவது ஜனாதிபதி அனுப்பிய "பூமராங்" மீண்டும் அவரிடமே சென்றிருக்கிறது. இது பொது ஜன முன்னணியைப் பொறுத்தவரையில் தர்மசங்கடமான நிலைமையையே தோற்றுவித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தியாளர்களுக்குத் தமது மாற்று அரசாங்கத்தில் உரிய பொறுப்புக்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்த போதும்-ஏ.எல்.எம்.அத்தாவுல்லா தலைமையிலான அதிருப்தி குழுவினர் அதனை நிராகரித்துள்ளனர். அமைச்சுப் பதவிகளைக் காட்டிலும், தமக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் உரிமைகள் காக்கப்படுவதே முக்கியம் என அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். பிந்திய செய்திகளின் படி ஸ்ரீ.மு.காங்கிரஸின் அதிருப்தியாளர் குழு பிரதம மந்திரியுடன் இணக்கம் ஒன்றை எட்டியிருக்கிறது.

எனவே நாம் தெரிவித்தபடி, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான உண்மை விபரங்களையும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை அதிகரிக்கக் கூடிய உறுதிமொழியை, பிரதம மந்திரி ஸ்ரீ.மு.காங்கிரஸின் அதிருப்தியாளர்களுக்கு வழங்கியிருக்கிறார். தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக கைவிடல் அறிவிப்பும் பிரதமருக்கும் அதிருப்தியாளர்களுக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்த உதவியிருக்கிறது. இதனையடுத்து அவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் திரும்பி அரசாங்கத்துக்கு ஆதரவை வெளிக்காட்ட இணங்கியிருக்கின்றனர். இதனடிப்படையில் மாற்று அரசாங்கம் தொடாபான பொ.ஐ.முன்னணியின் இரண்டு நகர்வுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு ஸதம்பிக்கச் செய்வதில் வெற்றி கண்டிருக்கிறது. தற்போது பொ.ஐ.முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான, பிரசாரங்களை மாத்திரமே முன்கொண்டு செல்வதனை மாற்று அரசாங்கத்திற்குரிய முக்கிய பணியாக நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இதற்கு அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டமும், ஜனாதிபதியின் கட்சிக்கு உந்துதலை தந்திருக்கிறது. வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக அரசாங்கத்துக்குள்ளும் அதிருப்தி அலைகள் தோன்றியுள்ளன.

மக்களுக்கு எவ்வித நிவாரணங்களையும் வழங்காத இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாக மக்கள் முன்னால் எவ்வாறு நியாயம் கூறுவது என அரசாங்கத்தரப்பினர் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். படித்த மக்கள் மத்தியில் இந்த வரவு செலவுத் திட்டம் அபிவிருத்திக்கான திட்டம் என அரசாங்கத் தரப்பினர் கூற முடியும். ஆனால் சாதாரண மக்கள் மத்தியில் அந்தப் பிரசாரம் வெற்றியளிக்கப் போவதில்லை.

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சில்லறை மற்றும் மொத்த விற்பனைப் பொருட்களிலும் "பெறுமதி சேர்வரி" அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், பொருட்கள் மீதான விலையுயர்வுகள் நிச்சயமாக மக்களைப் பாதிக்கப் போகின்றன. இதனை பொ.ஐ.முன்னணி தீவிரமான பிரசாரமாகக் கொண்டு செல்வதன் மூலமே அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் கருத்தை ஊக்குவிக்க முடியும். எனினும் பொ.ஐ.முன்னணியின் இந்தப் பிரசாரத்தை முறியடிக்க வேண்டிய முன்னெடுப்புக்களையும் அரசாங்கம் எடுத்து வருகிறது. அதில் ஒன்று தான் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆலோசனைகளை அரசாங்கம் மீள் திருத்தம் செய்து வருவதாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் அனுப்பும் பணத்திற்கு வரி அறவிடப்படும் என அமைச்சர் கே.என். சொக்ஸி பரிந்துரைத்திருந்தார். எனினும் தற்சமயம் அந்தப் பரிந்துரையை விலகிக்கொண்டுள்ளமை பொ.ஐ.முன்னணி வரவு செலவுத் திட்டத்தினைச் சுட்டிக்காட்டி மேற்கொள்ள இருந்த எதிர்ப்புப் பிரசாரத்திற்கு ஆரம்பப் பாதிப்பைக் கொடுத்திருக்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பமொன்றில் வெளிநாட்டு உதவியுடன் நாட்டின் அபிவிருத்தியை முன்கொண்டு சென்று மக்களுக்கு நிவாரணத்தை வழங்கப் போவதாக அரசாங்கம் உறுதியை வழங்க ஆயத்தமாகிறது.

இதன் நகர்வுகளில் சில கட்டங்கள் தற்சமயம் அரங்கேற்றப்படுகின்றன.

அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களை முறியடித்தல், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்களை முறியடித்தல் (தமிழீழ விடுதலைப்புலிகளைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கான நிதிகளைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கத்தின் முயற்சிக்கு இது பிரதான பங்கை வகிக்க முடியும்), பொ.ஐ.முன்னணிக்கு எதிராக சர்வதேச பிரசாரங்களை திசை திருப்புதல், நோர்வே உட்பட வெளிநாட்டு அரசாங்க பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட தடைகள் இதில் அடங்கும். இவ்வாறான நடவடிக்கைகளில் அரசாங்கத் தரப்பினரும், ஜனாதிபதியும் ஈடுபட்டு வருகின்ற அதேநேரம், இதில் வெற்றி பெறப் போகிறவர்கள் யார்? நாட்டில் எதிர் நோக்கப்படுவது பொதுத்தேர்தலா? அல்லது மாற்று அரசாங்கமா? என்பதற்கான விடைகள் இப்போதைக்குக கிடைக்க வாய்ப்பில்லை.



# அன்பினால் உறவை வளர்த்திடுவோம்

**ஞாயிறு நற்சிந்தனை**

**J. அனுஸ்**

மனிதனின் வாழ்வில் அன்பானது உணர்வினால் ஏற்படும் ஒன்று அல்ல. மனித இயல்புடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்று. அத்தகைய அன்பினை மனிதன் எந்தளவு தன வாழ்வுடன் இணைதது்ள்ளான் என்பது கேள்விக் குறியாக உள்ளது. அன்பு செய்ய வேண்டுமாயின் மனிதனிடத்தில் சந்திபபுக்கள் ஏற்படுதல் வேண்டும். அவா களிடத்தில் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான உரையாடல்கள் மற்றும் மகிழ்வுகளில், துன்பங்களில் பகிர்ந்து கொள்ளும் நிலை, தேவைகளைக கேட்டறிதல், உதவி தேவைப்படும இடத்து உதவிபுரிதல் போன்றவை அன்பின் வெளிப்பாடுகளாக காணப்படுகின்றன. இத்தகைய அன்பின் வெளிப்பாடுகளை மனிதன் இவ்வுலக வாழ்வில் கைக்கொள்கின்றானா? இல்லவே இல்லை, ஒரு மனிதனுக்கு தொற்றுநோய் என்றால் மாத்திரம் அந்த நபரைப்பற்றி அறிய அனைவரும் முற்படுவர். அவ்வாறு இருப்பதற்கு காரணம் தமக்கு அந்த நோய் தொற்றிவிடாமல் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கே ஆகும்.

தூய பவுல், கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுகின்றார் "என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை" என. ஏனெனில அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும், பொறாமை அடையாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம் கொடாது, தீங்கு நினையாது எனத் தெளிவாக கூறியுள்ளார். ஆகவே, ஓர் மனிதன் உண்மையான அன்பினை இவ்வுலகில் கொண்டவன் ஆயின், அவன் பெரும் செல்வத்தினைப் பெற்றுள்ளான் ஆனால், அனைவரும் இத்தகைய நிலையினை அடையமுடியாதவர்களாக உள்ளனர் அதற்கு காரணங்கள் உண்டு. அன்பினை மனிதன் விலைகொடுத்து வாங்கும் ஒன்றாக, சொத்துக்களுக்கு அடிமையாகும் ஒன்றாக, சுயநலத்தினைக் கருத்தில் கொள்ளும் ஒன்றாக, வெளிவேடத்தினைக் கொண்டதாக காணப்படுவதினாலேயே ஆகும்.

இறைமகன் கிறிஸ்து அன்பினை எம் வாழ்விற்கு வாழ்வாக்க வந்தவர். அவ் அன்பின் நிலையினை இருதன்மையில் குறிப்பிடுகின்றார். முதலாவது இறையன்பு இரண்டாவது பிறரன்பு. முதலாவது இரண்டாவதில் தங்கியுள்ளது. இரண்டாவது முதலாவதை நிறைவு செய்கின்றது. நான் உன்னை அன்பு செய்கிறேன் என வார்த்தையால் மட்டும் கூறினால் போதாது. அதனை வாழ்வாக்க வேண்டும். அப்போது அங்கு உண்மை அன்பு மிளிரும். அதனையே இறைமகன் கிறிஸ்துவும் மேற்கொண்டார். உங்களை "அன்பு செய்பவர்களை நீங்கள் அன்பு செய்யுங்கள்" என்ற இறை வார்த்தையிலும் மேலாக, கடவுள் எம ஒவ்வொருவரையும் அன்பு செய்கிறார். அதன் வெளிப்பாடு கிறிஸ்துவாக எமக்கு வெளிப்படுத்தியமை உணரக்கூடியதாக உள்ளது. அதிலும் அவரது அன்பின் மேன்மையினை, தம் ஒரே மகனை எமக்காக பலியாக்கியதன் ஊடாக நாம் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

எனவே இத்தகைய அன்பு கொண்ட கடவுளை நாம் அன்பு செயகின்றோமா?, அதனை எவ்வாறு மேற்கொள்ளலாம்? எம் அயலவன்மட்டில் நான் ஒற்றுமையாகவும் ஏற்றத் தாழ்வு இன்றியும், பொறாமை போட்டியின்றியும் அவனது எந்தவொரு செயற்பாட்டிற்கும் துணைபுரியும் இடத்து அன்பு அங்கு மிளிர்கின்றது. அத்தோடு ஏனைய அனைத்து நற்பண்புகளும் அவனிடத்தில் காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் உள்ள ஒவ்வொரு மனிதனும் இயல்பாகவே இறையன்பில் நிலைத்து இருக்கின்றான். அத்தகைய வாழ்வினை நாமும் வாழ்த்திட முயற்சிப் போம்.

## சுதந்திரன் சிறுகதைகள் வெளியீடு; பத்து நூல்கள் இன்று அறிமுகம்!

(யாழ்ப்பாணம்)

சுதந்திரன் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழாவும், ஏனைய பத்து நூல்களின் அறிமுக விழாவும் யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில், பிரதம விருந்தினராக பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொள்வார். சுதந்திரன் சிறுகதைகள் நூல் வெளியீட்டுரையை சிற்பி சரவணபவனும அறிமுக உரையை கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவர்.

இவ்விழாவில் அ.வேலுப்பிள்ளையின் 'சு.வேயின் சிறுகதைகள்', கலாநிதி க.குணராசாவின் 'ஈழத்துச் சிறுகதை வரலாறு', அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'ஒரு காதலின் கதை', செம்பியன் செல்வனின் 'சர்ப்ப வியூகம்', கோகிலா மகேந்திரனின் 'குயில்கள்', கே.வி.நடராஜனின் 'ஊரும் உலகமும்', கவிஞர் கல்வயல் வே.குமாரசாமியின் 'ஒரு கண ஊர்நினைப்பு', சிற்பியின் 'சத்திய தரிசனம்' வே.ஐயாத்துரையின் 'ஐயாத்துரை கவிதைகள்', கனக. செந்திநாதனின் 'வெண்சங்கு' ஆகிய நூல்களும் அறிமுகப்படுத்தப்படும்.

## மாதாந்த உதவிப்பண அட்டைகள் மீளாய்வு

(பன்னாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களில் மாதாந்தம் உதவிப்பணம் பெறுபவர்களின்-மாதாந்த உதவிப்பணம் பெறும் அட்டைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கான செயற்பாடுகளை சமூக சேவை உத்தியோகத்தர் சு.வரதபாஸ்கரன் மேற்கொண்டுள்ளார். (72)

## கலந்துரையாடலுக்கு சமூகமளிக்க கோரிக்கை

(அரியாலை)

அரியாலை - கொழும்புத்துறைப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை வெளியேறக் கோரி ஏ-9 வீதியில் மறியல் போராட்டம் நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம், இன்று காலை 8 மணிக்கு யா/கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு ஜே/95 பிரிவு கிராம மக்கள் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகள் அனைவரையும் சமூகமளிக்குமாறு அரியாலை - கொழும்புத்துறை பிரதேச பொதுமக்கள் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர்.

## மொழிவிருத்திச் செயற்திறன் பரீட்சை

(மீசாலை)

"யுனிசெவ்" அனுசரணையுடன் தென்மராட்சி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 பாடசாலைகளில் நடாத்தப்படும் -"மொழிவிருத்தி செயற்திறன்" இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை 12ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை வினாப்பத்திரங்களை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகம், பளை, கொடிகாமம், கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றில் பெற்று பரீட்சைகளை நடாத்தும்படியும் தெரிவித்தார். (25)

## இளவாலையில் சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

(காங்கேசன்துறை)

களுத்துறையில் நடைபெற இருக்கும் சமாதானத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் - யாழ். மாவட்டத்தின் சார்பாக பங்குபற்றவிருக்கும் யாழ். மாவட்ட அணிக்கும் இளவாலை யங் ஹென்றீசியன் அணிக்கும் இடையேயான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (71)






# விருட்சமாக வளரப்போகும் வித்து

சிறிகோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் ஜீ.நிரஞ்சன் சாதனை புரிந்ததும் அவரைப்பற்றிய சிறு குறிப்பொன்றை வாசகர்களுக்குத் தந்திருந்தோம். இந்த வாரம் அவருடைய நேர்காணலை வாசகர்களுக்குத் தருகின்றோம். தேசிய மட்டத்தில் இரு பதக்கங்களை பெற்ற அவரை வாழ்த்துகின்றோம். எம்முடன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டமைக்கு மகிழ்கிறோம். இந்நேர்காணலை ஏற்பாடு செய்த கௌதமனுக்கும் நன்றி.

- நிர்மலன்.

✷ *உங்களது விளையாட்டு அனுபவங்கள் எவ்வாறு இருந்தன?*

1992இல், 5ஆம் தரம் படிக்கும்போது முதன்முதலாக 11 வயதிற்குட்பட்ட பிரிவில் 75m, 50m, நீளம் பாய்தல் நிகழ்வுகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முதலிடங்கள் பெற்றுக்கொண்டேன். இதன் தொடர்ச்சியாக 17வயதிற்குட்பட்ட பிரிவில் கோட்ட, மாவட்ட, உபமாகாண மட்டங்களில் பங்குகொண்டேன். 2000ஆம் ஆண்டில் இருந்து இந்நிகழ்வுகளுக்காக வருட ஆரம்பத்திலிருந்தே பயிற்சிகளில் ஈடுபட்டேன். எனது ஆரம்பகாலப் பயிற்றுநராக இருந்தவர் எனது தந்தையேயாவார். எனது முழுக் குடும்பத்தவரினதும் உற்சாகமும் ஆதரவும் இருந்ததால் என்னால் பயிற்சிகளைச் சிறப்பாக மேற்கொள்ளமுடிந்தது.


✷ *உங்களது அதியுயர் போட்டிகளுக்கான பிரவேசம் எவ்வாறு அமைந்தது?*

2000ஆம் ஆண்டில் முதன்முதலாக வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 100m இல் முதலாம் இடத்தையும் 200m இல் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டேன்.

தொடர்ந்து, 2001ஆம் ஆண்டுமுதல் பாடசாலைப் போட்டிகளுக்குப் புறம்பாக விளையாட்டுத்துறை அமைச்சு நடத்திய திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் பங்குகொண்டேன். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய போட்டிகளிலும் பங்கு கொண்டேன். இவற்றில் 100m, 200m நிகழ்வுகளில் முதலிடம் பெற்றேன்.

✷ *தேசிய ரீதியிலான பாடசாலைப் போட்டிகள் பற்றி.....?*

இரண்டு தடவைகள் கலந்துகொண்டும் என்னால் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை. மூன்றாவது தடவையாக 2002இல் கொழும்பில் நடைபெற்ற தேசிய பாடசாலைப் போட்டிகளில் 21 வயதிற்குட்பட்ட பிரிவில் கலந்துகொண்டேன். இதில் 100m போட்டியில் முதலாம் இடமும் 200m போட்டியில் மூன்றாம் இடமும் பெற்றுக் கொண்டேன். இந்தப் போட்டியில் ஒரே சந்தர்ப்பத்தில் இரண்டு பதக்கங்களை வென்றமை எனக்கு அளப்பரிய சந்தோஷம். மேலும் இப்பதக்கங்களை எனது பாடசாலையான சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு அர்ப்பணித்து, எனது பாடசாலை தேசிய ரீதியில் விளையாட்டுத்துறையில் அறியப்படக் காரணமாக இருந்தமைக்கும் பெருமைப்படுகிறேன்.



✷ *விளையாட்டுத் துறையில் உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?*

இனி பாடசாலை மட்டத்தில் கலந்துகொளள முடியாது. எனவே, கழக மட்டத்தில் பங்குகொண்டு இயன்றளவில் திறமையைக் காட்டி மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் உச்ச நிலையை அடைய வேண்டும். மேலும் விசேடமாக நான் பெற்ற அனுபவங்கள் பயிற்சி முறைகளையும் கொண்டு எமது மாவட்ட வீரர்களை உருவாக்க வேண்டும். அவர்களை ஊக்குவித்து தேசிய மட்டத்தில் சாதனை புரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

✷ *உங்களது கல்லூரி உங்களுக்குக் களமாக அமைந்தது பற்றி....?*

எனது அதிபர் சி.தண்டாயுதபாணி தந்த உற்சாகம் அளப்பரியது. ஒவ்வொரு வெற்றிக்கும் அவரது ஆசீர்வாதம் இருக்கும். எனது ஆசிரியர்கள் ஜனாப் பசீர் அமீர், சி.சசிக்குமார் இருவரும் நிறையவே உதவினர். போட்டிகளின்போது எமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எம்மோடு நிற்பதென்பது இரட்டைப் பலம். இவ்வாசிரியர்கள் நிறைவாகவே அதனைச் செய்தார்கள். இவர்களுக்கு என்றும் நன்றியுடையவனாக இருப்பேன். அதோடு எனது பயிற்சியாளர்கள், நண்பர்களின் உற்சாகம் என்பவற்றையும் சிறப்பாகக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர்களுக்கு நன்றிகள். எனது பயிற்றுவிப்பாளர் ச.விஜயநீதன் எனது சாதனைக்கு பெரும் துணைபுரிந்தவர். அவரது ஊக்கம், வழிகாட்டல், அவர் பயிற்றுவித்த நுணுக்கங்கள் எல்லாம் எனக்குப் பெரும் உதவி புரிந்தன.

✷ *இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?*

நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். தற்போது உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டு இருக்கின்றேன். எனது அடுத்த பிரதான இலக்கு உயாகல்வி. அதிலும் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை உண்டு. எனது தாய், தந்தை விளையாட்டுத்துறை ஈடுபாடுடைய எனது உடன்பிறப்புக்கள் எல்லோருடைய உற்சாகமும் ஆசீர்வாதமும் என்னை முன்னோக்கிச் தள்ளிச் செல்கின்றன. அதோடு வெளியில் ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், என் மீது அன்புகொண்டோர் என்று வரிசைப்படுத்திக் கொண்டே செல்லலாம்.

இருபது வருடங்களாத் தொடர்ந்து கொண்டிருக்கும் அசாதாரண சூழ்நிலைகளால் எமது பிரதேச விளையாட்டுத்



துறை வளர இயலவில்லை. வசதிகளும் வாய்ப்புக்களும் இருந்தால் எவ்வளவோ சாதனைகள் புரியமுடியும். எனவே எதிர்காலத்தில் பாகுபாடின்றி எல்லோருக்கும் ஒரேவித வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அனைத்துத் தரப்பினரும் முயற்சி எடுக்க வேண்டும்.

வெற்றி பெற்றவர்கள் கௌரவிக்கப்பட வேண்டுமேயன்றி வெற்றிப் பிரதேசங்கள் அல்ல. இது பேதத்தை ஏற்படுத்தக் கூடும். சில அதிகாரிகள், அரசியல்வாதிகளின் போக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. இந்நிலை மாற வேண்டும். எமது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.எஸ். தௌபீக் எனக்குத்தந்த உற்சாகம் குறிப்பிடத்தக்கது. அவரைப் போலவே எல்லோரையும் எதிர்பார்க்கிறேன்.

**நேர்காணல்:- கௌதமன்**

# புதுமை என்றும் மாறாத பழமை

கிரிக்கெட் ஆட்டமானது எமது வயல் வெளிகள், வெற்றுக்காணிகளில் இருந்து சர்வதேச அளவில் பிரபல்யமான பந்தயத்திடல்கள் வரையில் மிகுந்த உற்சாத்துடனும் ஆர்வத்துடனும் விளையாடப்படும் பிரபல்யம் மிகுந்ததொரு ஆட்டம்.

எந்த மட்டத்தில் ஆடப்பட்டாலும் அதன் வேகமும் சுறுசுறுப்பும் எள்ளளவும் குறைவதில்லை. இன்னும் சிறிது அப்பால் நோக்கினால் ஒவ்வொரு மட்டத்திலும் அதற்கே உரிய தனித்துவத்துடன் ஆடப்படுவதையும் நோக்கலாம்.

உதாரணமாக யாழ்மாவட்டப் பாடசாலை மட்டக் கிரிக்கெட் விளையாட்டை எடுத்துக் கொண்டால் பங்குகொள்ளும் பாடசாலைகள் எல்லாமே உச்சமான உற்சாகத்துடன் தான் விளையாடுகின்றன. ஆனால் சென். ஜோண்ஸ் - சென்ரல் **BIG MATCH** என்றால் அது பற்பல பரிமாணங்களைக் கடந்து யாழ்.மாவட்டத் திருவிழாவாகவே மாறிவிடுகின்றது.

இதேபோலத்தான் கொழும்பில் றோயல்-தொமியன், ஆனந்த - நாலந்த போன்ற



நஸார்

**BIG MATCH** கள், கண்டியில் ரினிட்டி-சென். அந்தனீஸ் ஆட்டமும் அப்படித்தான். இதேபோல சிறிது அப்பால் சென்று சர்வதேச நிலையில் பார்க்கும்போது இந்திய- பாகிஸதான் அணிகளுக்கிடையில் நடைபெறும் ஆட்டங்கள் தென்னாசிய மட்டத்தில் தனித்துவமானது.

இருந்தும் கூட முன்னர் கதைத்த BIG MATCH போல சர்வதேச ரீதியிலும் ஒரு BIG MATCH SERIES இருக்கிறது. உலகக் கிரிக்கெட் ரசிகர்கள் குறிப்பாக டெஸ்ட் ரசிகர்கள் மட்டத்தில் சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களின் சிகரம் என்றால் அது ஆஷஸ் தொடர்தான் (ASHES SERIES). அதாவது கிரிக்கெட்டின் தாய்நாடான இங்கிலாந்தும் அவர்களின் குடியேற்ற நாடான அவுஸ்திரேலியாவும் மோதிக்கொள்ளும் டெஸ்ட் தொடரே ஆஷஸ் தொடர் (சாம்பல் தொடர்) என்று அழைகப்படும்.

சாதாரணமாக டெஸ்ட் தொடர் ஆரம்பிக்க ஒரு மாதத்துக்கு முன்பே இரு அணிகள் பற்றிய கருத்துக்கள், பரஸ்பர முறைப்புகள், உளவியல் யுத்தங்கள், சாதனைப் பட்டியலின் ஒப்பீடுகள், எதிர்வுகூறல்கள் என்று பத்திரிகைகளின் விளையாட்டுத்துறைப் பகுதியில் ஒரே அமர்க்களமாக இருக்கும். கனவான்களின் விளையாட்டாக கிரிக்கெட் இருந்த காலத்தில் அந்த வகையில் கருத்துக்கள் இருந்தன. இன்று கனவான் தன்மை சிறிது காயப்பட்டிருக்கிறதோ என்று அச்சமுறுவதாக இன்றைய தரம் இருக்கின்றது.



எது எவ்வாறாயினும் பழமை பற்றிப் பேசும்போது சேர் டொனால்ட் பிரட்மன் அடித்த சில முச்சதங்கள், லென்ஹட்டனின் 364 ஓட்டங்கள், ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் ஜிம்லேக்கர் (1956) எடுத்த பத்தொன்பது விக்கெட்டுகள், ஆஷஸ் தொடரில் ஒரு டெஸ்டில் இங்கிலாநது குவித்த 7 விக்கெட் இழப்பிற்கு 903 ஓட்டங்கள், அவுஸ்திரேலியாவின் அதிகுறைந்த 36 ஓட்டங்கள் என்று கூறிக் கொண்டு செல்கையில் - முத்தாய்ப்பாக ஒரு சில விடயங்களையும் குறிப்பிடலாம்.

அதி அற்புத வீரர் டொனால்ட் பிரட்மன், தான் விளையாடிய இறுதி ஆஷஸ டெஸ்ட் போட்டியில் ஒரு ரன்னும் எடுக்காமல் அவுட்டாகியது (நான்கு ரன்கள் மட்டும் எடுத்திருந்தால் அவரின் சராசரி நூறாக இருந்திருக்கும்), ஆஷஸ் தொடரில் அவர் எடுத்த 5028 ரன்கள், முதன்முதலாக 1877 இல் மெல்பர்ண் கிரிக்கெட் திடலில் (அவுஸ்திரேலியா) இரு நாடுகளுக்கும் இடையில் முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்றது - அதில் 45 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வென்றது போலவே அதேபாணியில் நூறு ஆண்டுகளுக்குப் பின் 1977இல் அவுஸ்திரேலியா 45 ஓட்டங்களால் இங்கிலாந்தை வென்றது போன்ற சுவாரசியங்களும் நடந்தேறின.

மேலும், டொன் பிரட்மனை சிறப்பாகவும் மற்றும் அவுஸ்திரேலிய அணியினரையும் கட்டுப்படுத்தவும், ஹரோல்ட் லாவூட் எனும் வேகப்பந்து வீச்சாளர் பயன்படுத்திய **BODY LINE BOWLING** முறையும், அதனால் இரண்டு நாடு களுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, இரு நாடுகளுக்கிடையிலும் கிரிக்கெட் தொடர்புகளே அற்றுப்போகும் முறுகல் நிலை ஏற்பட்டமையும் இன்றும் பேசப்படும் விடயமாகும்.


இப்படியான பிரபல்யமான ஆஷஸ் தொடரில் பங்குகொள்ள இங்கிலாந்து அணி, நஸார் உசைன் தலைமையில் தற்போது அவுஸ்திரேலியாவில் தங்கி நிற்கிறது. இப்பத்தி எழுதப்படுகையில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இந்தத் தொடர் ஆரம்பிக்க முன்னமேயே உலகின் அதிசிறந்த டெஸ்ட், மற்றும் ஒரு நாள் அணியென்ற பெயரை அவுஸ்திரேலியா தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் மக்ரா, ஷேன்வோண் உட்பட அவுஸ்திரேலிய வீரர்கள் அனைவருமே புகழ்பெற்ற, சாதனை வீரர்கள் என்பது உண்மையும் கூட.

அதேவேளை - இங்கிலாந்து அணி குறிப்பிடத்தக்க பலமான அணியும் அல்ல. இதன் காரணமாக அவுஸ்திரேலியா சிறிது 'மிதப்பாகவே' நடந்து கொள்வதை அவதானிக்க முடிந்தது. மேலும் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பயிற்சி ஆட்டங்களிலும் இங்கிலாந்து சிறிது தளர்வைக் காட்டியதால், அவுஸ்திரேலியாவின் 'மிதப்பு' இன்னமும் அதிகமாகவே காணப்பட்டது.

இதனால்தானோ என்னவோ, இங்கிலாந்து அணியைக் கூடுதலாகச் சிறுமைப்படுத்தும் விதத்தில் அவுஸ்திரேலியத் தரப்பில் இருந்து கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. "சகல டெஸ்ட் போட்டிகளையும் நாங்களே வெல்வோம். மைக்கல் வோன்தான் என் இலக்கு" என்கிற மக்ராவின் திமிர்ப்பேச்சு, நஸார் உசைனுக்கும் அணிக்கும் 'நக்கல்' அனுதாபத் தெரிவிப்புகள், முதலில் எங்களை வென்று காட்டட்டுமே என்கிற பிராந்திய அணிகளின் இறுமாப்பு- இப்படியே இங்கிலாந்து மீதான சேறு பூசுதல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக இங்கிலாந்து அணியின் பிளின்டோவ், டரன்கோ, டிரெய்ஸ் கோதிக் போன்றவர்கள் காயப்பட்டுள்ள நிலையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக இங்கிலாந்து அணிக்கு விளையாடத் தகுதியுடைய, அவுஸ்திரேலியாவில் இருக்கும் இங்கிலாந்து வீரர்களை அணிக்கு அழைக்கும் நிலையும் உள்ளது. அனாவசியமான கருத்துக் கூறப்போய், மார்க்வோ இல்லாதது நிம்மதியைத் தருகின்றது என்று இங்கிலாந்தில் யாரோ கூற, அதுவும் கேலிக்கிடமாகிவிட்டது.



ஸ்ரீவ் வோ

இன்னொரு சம்பவமாக இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீபன் ஹோர்மிஷன் பிராந்திய ஆட்டமொன்றில் மொத்தம் 16 வைட் போல்ஸ் போட, அதுவும் ஒரு ஓவரில் 7 வைட் போல்ஸ் போட, "இவர் இணையத் தளம் நடாத்துகிறார் தெரியுமா? அதனை WWW.WWWWWW என்று அழைப்பர்" என்று கிண்டலுடன் கூடிய நிரந்தரப் பதவியில் அமையும் பகிடியும் உருவாகிவிட்டது.

இப்படியாக 2002ஆம் ஆண்டின் ஆஷஸ் தொடர் களைகட்டி விட்டது. முடிவுகள் எப்படி அமையப்போகின்றன. கிரிக்கெட் அல்லவா. எதிர்வுகூறல் மிகக் கடினம். அதுவும் 5 டெஸ்ட் போட்டிகள். 'மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கப் பாயும்' என்று கூறுவது போல இங்கிலாந்து சிலவேளைகளில் ஆச்சரியங்களையும் ஏற்படுத்திவிடும். தங்கள் நாட்டில் நல்ல மழை என்று அவுஸ்திரேலியா துள்ளிக் குதிக்கக்கூடும் ஆனால் சிலவேளைகளில் இங்கிலாந்து இவர்களுக்குச் சூறாவளியாக மாறிவிடுமோ யார் அறிவார்? 1986-87 இன் பின் இங்கிலாந்து ஆஷஸ் வெற்றியைப் பெற இயலாமலே போயிற்று. இங்கிலாந்து கண்டதெல்லாம் சமன் செய்த ஆட்டங்களும், தோல்விகளும்தான். 2002 - 2003 டெஸ்ட் தொடர் என்ன வகையான திருப்பங்களைக் காட்டப் போகின்றது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

- நிர்மலன்.

# சரியாகத்தான் தீர்மானித்திருக்கிறார்கள்!

ஒருபுறம் ஆஷஸ் தொடரின் ஆரம்பம், பக்கத்து நாட்டில் ஏழு, ஒரு நாள் போட்டித் தொடர், இலங்கை அணி - தென்.ஆபிரிக்காவில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான விஜயம், பாகிஸ்தான் சிம்பாப்வேயைச் சந்திக்கப்போகிறது. ஒரே கிரிக்கெட் மயம்! இவையெல்லாம் மிகக் கூடுதலான உற்சாகத்துடனும் எதிர்பார்ப்புடனும், தம்மைத் தாமே எடைபோட்டுக்கொள்வதிலும் மற்ற அணிகளைப் பற்றி கண் துஞ்சாது கண்காணிப்பதிலும் ஈடுபடுவதானது கூடிய பரிமாணத்தைப் பெறுகின்றது. காரணம் அடுத்த வருடம் பெப்ரவரியில் தென்னாபிரிக்காவில் நடைபெறப்போகும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் தான். ஒருநாள் போட்டிகளின் அதி உச்சச் சாதனையாக அமையப் போவது உலகக் கிண்ணப் போட்டிகளில் யார் சாம்பியன் என்பதுதான்.



இருந்தபோதும் கிரிக்கெட் உலகில் பொதுவாகவே ஒரு ஆதங்கம் உண்டு. அது நிதிக் கொடுப்பனவுகள் தொடர்பானது தான். ரென்னிஸ், கூடைப் பந்து, குத்துச் சண்டை, உதை பந்தாட்டம் என்று சர்வதேச ரீதியில் பார்த்துக் கொண்டு போகும் போது, கிரிக்கெட் வீரர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகக் குறைவானது என்கிற கூற்றில் உண்மையில்லாமல் இல்லை. சச்சின், கங்குலி போன்ற ஒரு சிலர் இதற்கு விதிவிலக்கு. இதனையே பொதுமைப் படுத்திவிடமுடியாது.


இந்த ஆதங்கத்தைத் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நன்றாக உணர்ந்திருக்கிறது என்பதை அண்மைய செய்திகள் தெளிவாக்குகின்றன. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் அச்சாணியாக அமையப்போவது விளையாட்டு வீரர்கள் தான் என்கிறார் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அலி பச்சார். ஆகவே தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையும் (UCBSA), ICCஉம் சேர்ந்து வீரர்களுக்கு அள்ளி வழங்க உத்தேசித்துள்ளார்கள். இது எந்தவகையில் அமையப் போகின்றது?

1999 இல் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது வழங்கப்பட்ட பரிசுப்பணத்தை விட ஐந்து மடங்காக இது இருக்கப் போகின்றது. மொத்தமாக நடைபெறவிருக்கும் 54 ஆட்டங்களிலும் பரிசுப் பணமாக 56 மில்லியன் (560 இலட்சம் ரூபா) இலங்கைப் பணப்பெறுமதி வழங்கப் படவிருக்கின்றது. இறுதியாட்டத்தில் வெற்றிபெறப்போகும் அணி, பெறப்போகும் பணப் பரிசு இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்கள் (22.4 மில். ரூபா). இப்படியான பெருந்தொகைப் பணம் கொடுப்பதன் மூலம் கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுக்க முடியும் என்கிறார் அலிபச்சார். தொடர்ந்து அணிகள் மென்மேலும் பலமுள்ள அணிகளாக மாறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் கூறுகிறார். இதனைத்தான் ஏற்பாட்டாளர்கள் ஒவ்வொரு கட்டத்திற்கும் பெருந்தொகைப் பணத்தை அள்ளிவழங்குகிறார்கள். இரண்டாம் இடம் பெறும் அணி பெறப்போகும் வெகுமதி, 800,000 அமெரிக்க டொலர்கள். அரை இறுதி ஆட்டங்களில் பங்குகொண்டு தோல்வியுறும் அணிகள் இரண்டும் தலா நான்கு லட்சம் அமெரிக்க டொலர்கள் பெற்றுக்கொள்ளவிருக்கிறார்கள். மேலும் ஐந்தாம் ஆறாம் இடங்கள் பெறும் அணிகள் தலா ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் மற்றும் 80,000 அமெரிக்க டொலர்கள் பெறப்போகிறார்கள். சுப்பர் சிக்ஸ் நிலையில் ஒன்பது ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. இவற்றுள் வெல்லும் அணி 40,000 அமெரிக்க டொலர்கள் பெற்றுக்கொள்ள, தோல்வியடையும் அணி 20,000 அமெரிக்க டொலர்கள் பெற்றுக் கொள்ளும்.

ஒரே பண மழைதான் போங்கள்!

-பிரகாசன்-

# நம்பி ஒப்படைத்தால் இப்படியா?



வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் போகும் பாடசாலைகளும் இலங்கையில் இருக்கின்றன என்றால் நம்புவீர்களா? இது பொய்யல்ல, உண்மையானதுதான்.

ஏ-9 பாதை திறந்த பின் தென்னிலங்கைச் சுற்றுப் பயணங்கள் பல மேற்கொண்ட எங்கள் பாடசாலைச் சிறார்களுக்கு நாடி தொப்பென்று விழுந்திருக்கும். அது ஒருபுறம் இருக்க, விடயம் இதுதான். இங்கு குறிப்பிடப் படுவது விளையாட்டுச் சார்ந்த சுற்றுப் பயணங்கள். இதனை ஒழுங்குபடுத்துபவர்கள் விளையாட்டு அமைப்புக்களும் குறிப்பிடத்தக்க பயிற்றுநர்களும்தான். இவர்கள் விளையாட்டுத் துறைச் சுற்றுப் பயணங்களுக்குத் தெரிவுசெய்யும் நாடுகள் விசா இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இந்தியா, தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குத்தான்.

தமது தனிப்பட்ட செல்வாக்கு, அறிமுகங்கள் மூலம் விளையாட்டுப் போட்டிகள் (GAMES) ஏற்பாடு செய்து இந்தப் பிரபலங்கள் மூன்றாந்தர அணிகளுடன்தான் விளையாட்டுகளை ஏற்பாடு செய்கிறார்கள். சிலவேளைகளில் அணிகளுக்குக் கொடுக்கப்படும் வாக்குறுதிக்கமைய ஆட்டங்கள் நடைபெறுவதில்லை என்பதும் கண்கூடு. இவர்களை நம்பி புறப்படும் பாடசாலைப் பிள்ளைகள் பாவம். அதைவிடப் பாவம் அவர்களின் பெற்றோர்கள். இந்த வகையில் தனியார் குழுக்களின் விளையாட்டுச் சுற்றுப் பயணங்களும் அடக்கம்.

இதெல்லாம் எதற்காக? சர்வதேச ரீதியில், நாட்டில் விளையாட்டு வீர, வீராங்கனைகளை உருவாக்கிவிட வேண்டும் என்ற சிந்தனையா? விடயங்களைப் பார்த்தால் அந்தப் பக்கம் குறைவாகத்தான் இருக்கும்போலத் தெரிகிறது.

அதனைவிட வர்த்தக மற்றும் இலாப நோக்கங்கள் மேலோங்கி நிற்பதுபோல தென்படுகின்றது. ஏனெனில் மலைநாட்டுப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விமானநிலையத்திற்குத் தன் அவசியம் கருதிச் சென்றிருந்த போது, ஒரு பிரபல்யமான பெண்கள் பாடசாலைச் சிறார்களும் ஆசிரியர்களும் அங்கு வந்து இறங்கியிருக்கிறார்கள். அப்படி இறங்கிய பெண்பிள்ளைகளின் கைகளில் இவ்விரண்டு விஸ்கிப் போத்தல்கள். பாராளுமன்ற உறுப்பினருக்கு மனதை உறுத்தியிருக்க வேண்டும். விடயத்தை அறிந்து கொள்ளுமுகமாக மாணவிகளை அணுகியபோது, அழைத்துச் சென்ற உத்தியோகத்தர்கள் தீர்வையற்ற கடைகளில் இவற்றை வாங்கித் தம்மிடம் தந்து, அவற்றை விமான நிலையத்துக்கு வெளியே கொண்டு வந்து தரும்படி கேட்டுக்கொண்டதாக உண்மையைக் கூறியிருக்கிறார்கள் (வஞ்சகம் தெரியாத வயதல்லவா). உண்மையை உணர்ந்து கொண்ட உறுப்பினர், இது தொடர்பில் உரிய கல்வி அதிகாரிகளுக்கு முறைப்பாட்டை மேற்கொண்டிருக்கிறார். சரியான நடவடிக்கை எடுக்கப்படும், இப்படியான சிறார் துஷ்பிரயோகங்கள் தடுக்கப்படும் என்று அவர் விசுவாசமாக நம்பவும் கூடும். ஆனால் கல்வியுலகில் நன்றாக அடிபட்ட அனுபவஸ்தர் ஒருவர் விரக்தியாகச் சிரிக்கிறார். ஏனெனில் எந்தப் பகுதியிலும் பாடசாலைகளில் நடைபெறும் இவ்வகைத் துஷ்பிரயோகங்கள் 'அந்த மாதிரி' மூடிமறைக்கப்பட்டு, 'குருவே தெய்வம்' என்று தமக்குத்தாமே முதுகில் தட்டிக்கொண்டு மிதப்பாக வாழ்வதை அவர் கண்டு, கேட்டு உணர்ந்திருக்கக்கூடும்.

-சரண்யன்-

# சாம்பற் சிமிழ்



மார்க் டெய்லர் ஆஷஸ் கிண்ணத்துடன்

1882 -83 ஆஷஸ் தொடரில் விறுவிறுப்பான ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்திலேயே, இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவிடம் மண்கவ்வியது. இதனைப் பொறுக்க முடியாத இங்கிலாந்து ரசிகர்கள் "1882 ஆகஸ்ட் 29ல் ஒவல் மைதானத்தில் மரணித்த ஆங்கிலேய கிரிக்கெட்டினை நண்பர்கள் நினைவு கூர்கின்றோம். உடல் தகனம் செய்யப்பட்டு சாம்பல் அவுஸ்திரேலியாவிற்குக் கொண்டு செல்லப்படும்" என்று ஒரு மரண அறிவித்தலைப் பத்திரிகையில் பிரசுரித்தார்கள். 1882-83இல் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா சென்று 2 டெஸ்ட் போட்டிகளில் வென்றபோது மெல்போர்ன் பெண்மணிகள்

## ஒரு வரலாற்றுத் தகவல்

மூன்றாவது டெஸ்டில் பயன்படுத்திய பேல்ஸ் ஒன்றின் சாம்பலை இங்கிலாந்து வீரர்களிடம் கொடுத்தார்கள் என்றும் ஒரு கதை உண்டு. இன்னொரு செய்தியில் இந்தச் சாம்பலானது, ஒரு கிரிக்கெட் பந்தினுடையது என்றும் இங்கிலாந்தின் டான்லி பிரபுவுக்கு சேர்.வில்லியம் கிளாக் என்பவரால் கையளிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் 1927ல் டான்லி பிரபு இறந்த பின், அவரின் மனைவி அதனை MCCயிடம் ஒப்படைத்தார். இது இன்னமும் லோட்ஸ் மைதான மியூசியத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளது. யார் வென்றாலும் இது கைமாறுவதில்லை. இத்துடன் சேர்த்து 1882ன் SCORE CARD ம் வைக்கப்பட்டுள்ளது. ஆஷஸ் தொடரை யார் வென்றாலும் இச்சிமிழ் லோர்ட் மைதான அரும்பொருள் காட்சியகத்திலேயே இருக்கும். இது கைமாறாது. இதனால் அவுஸ்திரேலியாவிற்கு அதிருப்தியும் உண்டு. இந்த சாம்பலைக் கொண்ட சிமிழ் நான்கு அங்குல உயரம் மட்டுமே கொண்டது. ஆனால் இதன் பெறுமதியை உயரத்தைக் கொண்டு அளந்து விட முடியுமா..?

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப்பெறின்*

- திருக்குறள்

# நமது நோக்கு

## சிறந்ததோர் ஆரம்பம் !

தமிழர் தாயகப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வருக்கும் புனர்வாழ்வு - புனரமைப்பு - மீள் குடியேற்றம் சார்ந்த பணிகளுக்கென, நேரடி வெளிநாட்டு உதவிகளை ஏற்றுக்கொள்ளத்தக்கதான நிதியமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

'வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நிதியம்' என அழைக்கப்படும் இந்த நிதியமே - இனிமேல், தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படவிருக்கும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கையாளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கப் போகின்றது.

இவ்வாறான நிதியமொன்று உருவாக்கப்படுவது - தமிழ்மக்களைப் பொறுத்தவரையில், பல வகையிலும் அத்தியாவசியமானதும் முக்கியத்துவம் வாய்ந்தது மாகும்.

போரினால் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கும், பின்தள்ளப்பட்டிருக்கும் தமிழரின் பொருளாதாரத்தை மீளவும் - மிகநேர்த்தியாகவும், தொலைநோக்கு இலக்குகளுடனும், எமது சுயம் சார்ந்ததாகவும் கட்டியெழுப்புவதற்கு, எமது அதிகாரத்தின் கீழ்வரும் நிதியம் - ஒரு தக்க வழித்துணையாகும்.

எமது மக்களுக்கான தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்துவைக்கவும் - தமிழ் மக்களுக்கான உறுதியான பொருளாதாரக் கட்டுமானமொன்றை நாமே உருவாக்கிக் கொள்ளவும் இனி வழியேற்படும்.

இதனூடாக தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள வளங்கள், நிபுணத்துவம், தொழிற்படை என்பன வற்றின் உச்சப்பயன்பாட்டினையும் விருத்தி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

இதேவேளை - கிளிநொச்சியில், இந்த நிதியத்தின் தலைமையகம் அமையவிருப்பதானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது.

தமிழர் தாயகப் பகுதிக்கான நிர்வாகக் கட்டமைப்புகளின் உருவாக்கத்தில் - இத்தகையதொரு தலைமையகம் தாயகப்பகுதியிலேயே அமையவிருப்பது - அதிலும் சர்வதேசத்தின் ஆதரவுடன் தலைமைப் பணிமனையொன்று உருவாவது - தமிழ்மக்கள் தமக்கான நிர்வாகத்தை, தமிழ்மண்ணிலேயே - உலக அங்கீகாரத்துடன் கருக்கொள்ள வைப்பதன் ஆரம்பமென்றும் கூறலாம்.

இது பொருளியல் நோக்குகள் கடந்த - அரசியல் இலக்குகளுக்கும் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியென்றே கொள்ள முடியும்.

அதேவேளை - வரலாற்றில் முதற்தடவையாக, வெளிநாடுகளின் நிதியுதவிகள் நேரடியாகவே இத்தகைய நிதியத்திற்கு கிடைக்கவிருப்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகின்றது.

வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெறுவதன் மூலம் -

விடுதலைப்புலிகளின் முக்கிய பங்கேற்புடனான நிதியத்தின் செயற்பாடானது- இதுவரை காலமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கென, தமிழர்களுக்கென உதவப்பட்ட நிதியுதவிகள் திசைமாற்றப்பட்டதைப் போன்ற நிலை உருவாவதைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

வட, கிழக்கில் ஒருங்கிணைந்த அபிவிருத்திப் பணிகளை துரிதமாகவும், பெருமெடுப்பிலும் மேற்கொள்ள உதவுவதாக இருக்கும்.

அதேவேளை - விடுதலைப்புலிகளை சர்வதேச அளவில் அங்கீகரிப்பதுடன், விடுதலைப்புலிகளின் அரசியல் இலக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்ற செய்தியையும் சர்வதேசம் இதன்மூலம் வலியுறுத்திக்கூறும்.

இத்தகைய முக்கியத்துவம் மிக்க அபிவிருத்தி நிதியத்தின் உருவாக்கத்திற்கும், செயற்பாட்டுக்கும் பல நாடுகள் தமது முழுமையான ஆதரவையும், பங்கேற்பையும் நேரடியாகத் தெரிவிக்கவும் ஆரம்பித்துவிட்டன.

குறிப்பாக - நேற்று முன்தினம், கிளிநொச்சி வந்த உயர்மட்ட ஜப்பானிய அரசின் உயர்மட்டக் குழுவினர் - தமது முழுமையான ஒத்துழைப்பையும் தருவதாக உறுதியளித்துச் சென்றுள்ளனர்.

இந்த வகையில் - வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நிதியத்தின் ஆரம்பம், சிறப்பான நம்பிக்கை தரும் அறிகுறிகளுடன் ஆரம்பித்திருக்கின்றது என்று துணிந்து கூறலாம்.

எனவே - ஒட்டுமொத்தமாக, ஈழத்தமிழ்மக்களின் எதிர்கால அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில்- இந்த நிதியத்தின் தோற்றம், பெரும் திடத்தையும், புத்துணர்வையும் தருவதாக அமைந்திருப்பதை ஆணித்தரமாகச் சொல்லலாம்.

இது ஒரு ஆரம்பமாக - இனி எமக்கான காலம் கனியட்டும்! காத்திருப்போம்!!

# இராணுவத்தினரின் உணவில் மோசடி; அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் உத்தரவு!

(நமது நிருபர்)

வவுனியா இராணுவ முகாம்களில் உள்ள படையினருக்கு வழங்கப்படும் உணவுப்பங்கீட்டில் மோசடி இடம்பெற்றதாகக் கூறப்படுவது குறித்து விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவைக் கேட்டுள்ளார்.

படையினருக்கு வழங்கப்படும் உணவுப் பங்கீட்டில் கோடிக் கணக்கான ரூபா மோசடி நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமான பல முக்கிய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. மேஜர் ஜெனரல்கள் இருவரும் மேலும் பல உயர் அதிகாரிகளும் இதில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவர்களிடம் இன்னும் இது குறித்த விசாரணைகள் நடத்தப்படவில்லை.

பிரிகேடியர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 8 அமைச்சர்கள் நியமனம் ஏற்க ஜனாதிபதி மறுப்பு

ஐ.தே.மு. அரசினால் பிரேரிக்கப்பட்ட 8 அமைச்சர்களின் நியமனத்தை ஜனாதிபதி ஏற்க மறுத்துள்ளார். இந்த அமைச்சர்களின் திணைக்களங்கள் தெளிவாக தெரிவிக்கப்படாமையினால் இவர்களது நியமனத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க முடியாது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை கிருஷ்ணபிள்ளை எம்.பி. கைவிட்டார்

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடப்போவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை அறிவித்திருக்கின்றார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டத்திற்குச் செல்லும் போது படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டமைக்குக் காரணமான சூத்திரதாரி யார் எனக் கண்டறியப்பட்டு அவர் மீது நடவடிக்கை எடுக்கும் வரை தாம் நாடாளுமன்றம் செல்லப் போவதில்லை என கிருஷ்ணபிள்ளை எம்.பி. முன்னர் தெரிவித்திருந்தார். இதனால், இவர் வரவு செலவுத்திட்டக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இவரை, 23 ஆவது டிவிஷன் தளபதி பிரிகேடியர் எஸ்.ஆர். பாலசூரிய மற்றும் கேணல் சில்வா ஆகியோர் சந்தித்து குறிப்பிட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு காரணமானவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து, தனது நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை கைவிட கிருஷ்ணபிள்ளை எம்.பி. தீர்மானித்துள்ளார்.

# 'மாமனிதர்' பேராசிரியர் துரைராசா: தமிழினத்தின் கலங்கரை விளக்கு!

(அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் 69ஆவது பிறந்த தினம் இன்றாகும்)



இன்று அமரர் துரைராசா என்ற உச்சரிப்பு யாழ்ப்பாணப் பல்கலைககழகம் என்ற உயர் கல்வி நிறுவனத்துடன் சேர்ந்த ஒரு பெயராக மாறிவிட்டது. இப்பல்கலைக்கழகம் தோன்றி வளர்ந்த வரலாறு மிகக் குறுகியதுதான். ஆனால் இக் குறுகிய கால எல்லைக்குள் அமரர் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் ஆறு ஆண்டு காலத்திற்குள் ஆற்றிய அளப்பரிய பணிகள் பல்கலைக்கழக வளர்ச்சிக்கு நீண்டகால வரலாற்றுப் பெருமையையும், புகழையும் தேடிக்கொடுத்தது என்பதில் ஐயமில்லை. அவை அவர் பதவி வகித்த காலத்தின் பின்னணியில் வைத்து விரிவாக மதிப்பிடப்பட வேண்டியவை. 1987 களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராகத் துணிவோடு பதவிப் பொறுப்பை ஏற்பது என்பது ஒருவரின் ஆளுமையையும், அச்ச உணர்வையும் பரிசோதித்துப் பார்க்கும் ஆபத்தான காரியம் என்பதைப் பல்கலைக்கழக நடைமுறைகளைத் தெரிந்து கொண்ட அனைவரும் நன்கு அறிவார்கள். அன்றைய அசாதாரண சூழ்நிலையைக் காரணம் காட்டி யாழ்ப்பாணத்துக் கல்விப் புலமையாளர் பலர் அகதி என்ற பெயரில் அந்நிய நாட்டின் அடிமை வாழ்வை நேசித்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்த போது, இதற்குப் புறநடையாக அமரர் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் தன் கல்விப் புலமையைத் தன் சொந்த மண்ணிற்கே பயன்படுத்த தன் குடும்பத்தோடு சொந்தக் கிராமத்தில் வந்து குடியேறியமை அவரிடம் குடிகொண்டிருந்த இனப்பற்றையும், நாட்டுப்பற்றையும் எடுத்துக் காட்டும் நல்லதொரு உதாரணமாகும்.

அமரர் துரைராசா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியால் தனக்கு ஏற்படப்போகும் துன்ப, துயரங்களையும், கிடைக்கப்போகும் சலுகைகளையும், யாழ்ப்பாணச் சமூகம் கல்வியாளனுக்கு கொடுக்கும் மதிப்பையும் முன் கூட்டியே நன்கு அறிந்திருந்தார். அவர் துணைவேந்தருக்குரிய எந்தச் சலுகையையும் எதிர்பார்த்து வரவில்லை. அதை அனுபவிக்க அவருக்கு வாய்ப்பும் இருக்கவில்லை. பல்கலைக்கழகத்தின் சாதாரண தொழிலாளிக்குரிய நிலையில் நின்றே தன் கடமையை ஆற்ற நினைத்தார். அவர் பல்கலைக்கழக கடமையின் நிமிர்த்தம் மழையிலும், குளிரிலும், கடலாலும், தரையாலும் பல நாட்கள் கொழும்பு சென்று வந்ததையோ, மக்களோடு மக்களாய் தாண்டிக்குள மரநிழலின் கீழ் உணவுக்காகக் காத்து நின்றதையோ தனக்கு கிடைத்த அசௌகரியமாகப் பார்த்ததில்லை. அவற்றையெல்லாம் தனக்குக் கிடைத்த புதிய அனுபவமாகப் பார்த்தார். சமகாலத்து துணைவேந்தர்கள் தென்னிலங்கையில் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்த போது இவர் மட்டும் சாதாரண குடிமகனாக வடமராட்சியிலிருந்து 44 கிலோமீற்றர் தூரத்தை துவிச்சக்கர வண்டி மூலம் கடந்து வந்து கடமையாற்ற வேண்டிய நிர்ப்பந்தம், அதற்காக அவர் என்றுமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாகத் தனக்குரிய கடமையாகப் பார்த்தார். இதற்கொரு உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம். 1992 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 6ஆம் திகதி என நினைக்கிறேன். அன்று தான் யாழ் மகளிர் கல்லூரியில் ஒன்பதாம் ஆண்டு மாணவர்களுக்கான வரலாற்றுப் பாட நூல் துணைவேந்தரால் அறிமுகம் செய்யும நிகழ்ச்சி. அன்று அதிகாலை 5.30 மணியளவில் கொட்டும் மழையில் மழைக்கவசம் அணிந்த ஓர் உருவம் அச்சுவேலியில் உள்ள எனது வளவின் வாசல் கேற்றைத் திறந்து கொண்டு வீட்டுவாசலை நோக்கி மழை வெள்ளத்தில் நடந்து வரும் சத்தம் கேட்கிறது. அசாதாரண சூழ்நிலை, பக்கத்தில் ஏதும் அசம்பாவிதம் நடத்து விட்டதோ என்ற அச்சத்தில் யன்னல் ஊடாகப் பார்த்தபோது வந்த உருவம் மீண்டும் வீதியை நோக்கி நடக்கின்றது. ஆனால் அந்த நிலவில் உருவத்தின் கம்பீரமான நடை எமது துணைவேந்தர் என்பதை உறுதிப்படுத்தியது. கதவைத்திறந்து துணைவேந்தரை வீட்டுக்கு அழைத்தபோது வழமையான புன்சிரிப்போடு ஆறு மணிக்கு முன பல்கலைக்கழகம் போகவேண்டும் என்று அவசரமாக வந்தேன். கெட்டகாலம் வல்லையிலே சைக்கிள் காற்றுப் போய்விட்டது என்று சிரித்துக் கொண்டே கூறினார். அப்போது நான் அவரிடம் கேட்ட கேள்விக்கு அவர் கூறிய பதில் அதிகாலை மூன்று மணிக்கே வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்டேன் என்பதுதான். இதை இன்னும் இருபது ஆண்டுகள் கழித்து இப்படியான துணைவேந்தர் ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றினார் எனக் கூறினால் எத்தனை பேர் நம்புவார்களோ தெரியாது.

அமரர் பல வசதியீனங்களுக்கு மத்தியில் துணைவேந்தராகக் கடமையாற்றிய போதும் அவரிடம் நாம் காணக்கூடியதாக இருந்த இன்னொரு நல்ல பண்பு அவர் தனது அதிகாரங்களை தவறான வழியில் என்றுமே பயன்படுத்தியதில்லை. அதைத் தவறுதலாக அநியாயங்கள் செய்ய வழங்கப்பட்ட சலுகையாக கருதியதும் இல்லை. மாறாக முடிந்த அளவிற்கு அதைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்காகவே பயன்படுத்திக் கொண்டார். அவர் பொறியியல் பட்டம் பெற்ற சர்வதேசப் புலமையாளர்களில் ஒருவர். மண்ணியலில் அவரது புதிய கண்டுபிடிப்பு அவர் பெயரில் புதிய கருதுகோளாகக் கற்பிக்கப்படக் காரணமாகியது. பொறியியல் துறையில் அவருக்கிருந்த ஆற்றலும், ஆய்வுப்புலமையும் அவர் நிலைக்கு வந்த ஒருவரால்தான் மதிப்பிடமுடியும். இருப்பினும் அவர் துணைவேந்தராகப் பதவி வகித்தபோது தமிழ் மக்களுக்கு எது பொருத்தமான கல்வித்துறையோ அதை விருத்தி செய்யும் வகையில் அத்துறை சார்ந்த புலமையாளரின் அறிவுரை கேட்டு தனது செயற்திட்டங்களை பல்கலைக்கழகத்தில் அழகாகவும், அகலமாகவும் விரித்துக் கொண்டார். தமிழ் மாணவர்களுக்கு மிக அவசியமான பொறியியல் பீடம், விவசாய பீடம் ஆகியவற்றை அமைப்பதற்குரிய முன் ஏற்பாடுகள் அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் காலத்தில் தொடக்கப்பட்டாலும் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் தொடங்கிவைத்த பெருமை அமரர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கே உரியது. அதேபோல் பொறியியல் பீடத்தை அக்கராயனில் தொடங்குவதற்குரிய தொடக்க கட்டுமானப் பணிகளும் இவர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இன்று தனித்துறையாக வளர்ந்துள்ள இராமநாதன் நுண்கலைப் பாடங்களை இளங்கலைமானிப் பட்டப்பாட நெறியாக மாற்ற அப்போது கலைப்பீடாதிபதியாக இருந்த தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து அமரர் அரும்பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

இப்பல்கலைக்கழகத்தில் அமரர் ஆற்றிய பெருமைக்குரிய இன்னொரு நல்ல பணி தன் தனிப்பட்ட முயற்சியில் ஆராய்ச்சி நூல்களை வெளியிட நிரந்தர நிதியம் ஒன்றை ஏற்படுத்தியதாகும். ஒரு பல்கலைக் கழகத்தில் இருந்து சமூகம் எதிர்பார்ப்பதில் அப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் படைப்புக்களும் ஒன்றாகும். பல பல்கலைக்கழக வாசல்பகுதியை அப் பல்கலைக்கழகப் படைப்புக்கள் அலங்கரிப்பதைப் பார்த்திருக்கிறோம். இதை உணர்ந்து செயல்பட்டவர் அமரர் துரைராசா அவர்கள். இவரின் தனிப்பட்ட முயற்சியால் 1992 இல் யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூல் பல்கலைக்கழக வெளியீடாக வந்தது.

இன்று அமரரின் 69ஆவது பிறந்த தினம். அவர் மறைந்து எட்டு ஆண்டுகள் கடந்து செல்கின்றன. வாழும் போது பலராலும் விமர்சிக்கப்படும் ஒருவர் மரணத்தின் போது போற்றப்படுவார். இது மரணத்தால் ஏற்படும் ஒரு நன்மை. ஆனால் அமரர் என்றுமே எல்லோராலும் போற்றப்பட்ட ஒப்பற்ற நல்ல மனிதர். அவருக்கே இயல்பான அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், நேர்மை, கடமை, மனிதநேயம் அவரை உயர்ந்த நிலையில் வைத்து எல்லோராலும் மதிக்கச் செய்தன. ஆரவாரமின்றி இன, மத, வேறுபாடுகளைக் கடந்து விசுவாசம் மிக்க நிலையான மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. தன பதவியை தன் சுயவிளம்பரத்திற்காகப் பயன்படுத்தியது கிடையாது. அதேவேளை மக்களுக்குப் பயனுள்ள சமூக நிகழ்வுகளில் இருந்து அவர் விலகியதும் கிடையாது. பல்கலைக்கழகத்தில் மூப்பு இளமை பாராது, தொழில் வேறுபாடு காணாது எல்லோரையும் இன் சொல்லால் வழிநடத்திய பெருமை அவருக்கே உள்ள இயல்பு. தன் மரணத்தின் நாட்களைத் தானே எண்ணிக் கொண்டு புன்சிரிப்போடு துணைவேந்தர் பதவிக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர் அமரர் துரைராசா அவர்கள். தந்தை செல்வாவின் மரணத்திற்குப் பின்னர் தமிழ்ச் சமூகம் ஒரு கல்வியாளனுக்காக கண்ணீர் வடித்ததென்றால் அமரர் துரைராசாவின் மரணத்தில் என்றே கூறலாம். அவர் நினைவு என்றும் நிலைக்கட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தடம் புரளாதிருக்க.

**கலாநிதி. ப.புஷ்பரட்ணம்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளல் - 2002

**நேற்றைய தொடர்ச்சி....**

| | |
|---|---|
| 021. யா/ச/378 | திரு.நடராசா ஜெயகாந்தன் |
| 022. யா/ச/381 | திருமதி இரத்தினம் சிவனேசன் |
| 023. யா/ச/433 | திருமதி புஸ்பராணி ரவீந்திரா |
| 024. யா/ச/449 | திருமதி இராசலட்சுமி நடராசா |
| 025. யா/ச/480 | திருமதி கமலாதேவி சண்முகலிங்கம் |
| 026. யா/ச/511 | திருமதி புஸ்பராணி விவேகானந்தன் |
| 027. யா/ச/578 | திரு.செல்லப்பா குணரத்தினம் |
| 028. யா/ச/580 | திரு.சின்னையா தில்லையம்பலம் |
| 029. யா/ச/602 | திருமதி பிறேமாவதி தெய்வேந்திரம் |
| 030. யா/ச/708 | திருமதி இரத்தினம்பாள் செல்லத்துரை |
| 031. யா/ச/723 | திரு.தாமோதிரம்பிள்ளை இராசரத்தினம். |
| 032. யா/ச/738 | திருமதி திருமலர் சிவபாலசுந்தரம் |
| 033. யா/ச/749 | திருமதி இந்திராவதி ஞானசேகரம் |
| 034. யா/ச/754 | திரு.மார்க்கண்டு சக்திவேல் |
| 035. யா/ச/759 | திருமதி சர்வேஸ்வரி பாலச்சந்திரன் |
| 036. யா/ச/761 | திருமதி சர்வேஸ்வரி பாலச்சந்திரன் |
| 037. யா/ச/771 | திருமதி வசந்தமலர் விக்கினேஸ்வரன் |
| 038. யா/ச/777 | செல்வி.லீலாவதி தியாகராசா |
| 039. யா/ச/785 | திருமதி கெங்காதேவி சண்முகநாதன் |
| 040. யா/ச/793 | திருமதி சரஸ்வதி குலசேகரம்பிள்ளை |
| 041. யா/ச/795 | திருமதி புஸ்பராணி குமாரசிங்கம் |
| 042. யா/ச/801 | திருமதி தேவராணி பரமசிவம் |
| 043. யா/ச/803 | திருமதி புவனேந்திரராணி தயாளன் |
| 044. யா/ச/805 | திருமதி சுசீலா செல்வராசா |
| 045. யா/ச/810 | செல்வி.பரஞ்சோதி கந்தையா |
| 046. யா/ச/821 | திரு.தம்பிப்பிள்ளை தங்கராசா |
| 047. யா/ச/855 | திரு.அப்புக்குட்டி சண்முகநாதன் |
| 048. யா/ச/867 | திரு.அப்புத்துரை யோகராஜா |
| 049. யா/ச/871 | திருமதி சரஸ்வதி கனகரத்தினம் |
| 050. யா/ச/921 | செல்வி.துஸ்யந்தினி கனகரத்தினம் |
| 051. யா/ச/940 | திருமதி இராசமலர் இராசையா |
| 052. யா/ச/990 | திருமதி இராசபூபதி சுப்பிரமணியம் |
| 053. யா/ச/1051 | திரு.சிதம்பரநாதன் சதானந்தன் |
| 054. யா/ச/1054 | திரு.முருகேசு சிதம்பரநாதன் |
| 055. யா/ச/1056 | திரு.கந்தையா ஜெகநாதன் |
| 056. யா/ச/1072 | செல்வி.வாசுகி நாகலிங்கம் |
| 057. யா/ச/1096 | செல்வி.சிவதேவி நவரட்ணம் |
| 058. யா/ச/1127 | செல்வி.நித்தியலட்சுமி பொன்னம்பலம் |
| 059. யா/ச/1141 | திருமதி இராசேஸ்வரி சிவப்பிரகாசம் |
| 060. யா/ச/1145 | திருமதி பசுங்கிளிராணி மனோகரன் |
| 061. யா/ச/1162 | திரு.அண்ணாமலை செல்வராஜா |
| 062. யா/ச/1184 | திருமதி மனோன்மணி பாலேந்திரா |
| 063. யா/ச/1223 | திரு.முருகுப்பிள்ளை கதிரவேற்பிள்ளை |
| 064. யா/ச/1302 | திரு.கந்தசாமி கேதீஸ்வரன் |
| 065. யா/ச/1327 | திரு.சண்முகம் கதிரவேலு |
| 066. யா/ச/1346 | திருமதி பகவதிஅம்மா இராசரட்ணம் |
| 067. யா/ச/1354 | திரு.வேலுப்பிள்ளை சிவராசா |
| 068. யா/ச/1452 | திரு.செல்லத்துரை மகாதேவன் |
| 069. யா/ச/1457 | திருமதி பாலேஸ்வரி இராமச்சந்திரன் |
| 070. யா/ச/1495 | திரு.வெற்றிவேலு தயாநாதன் |
| 071. யா/ச/1508 | திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை |
| 072. யா/ச/1520 | திருமதி சுமதி சிவனேசன் |
| 073. யா/ச/1585 | திருமதி வள்ளிநாயகி கனகரத்தினம் |
| 074. யா/ச/1648 | திரு.சண்முகம்பிள்ளை ஜெயானந்தம் |
| 075. யா/ச/1739 | திரு.சிவப்பிரகாசம் சிவகணேசசுந்தரன் |
| 076. யா/ச/1849 | திரு.தம்பு கணபதிப்பிள்ளை |
| 077. யா/ச/1855 | திருமதி அன்னபூரணம் இளையதம்பி |
| 078. யா/ச/1861 | செல்வி.சிவரஞ்சினி சுப்பிரமணியம் |
| 079. யா/ச/1986 | திரு.சிவவாகிதர் சிவயோகன் |
| 080. யா/ச/2026 | திரு.இரத்தினம் ஜெயரத்தினம் |
| 081. யா/ச/2149 | திரு.கார்த்திகேசு கதிர்காமநாதன் |
| 082. யா/ச/2221 | திரு.சண்முகம் விநாயகமூர்த்தி |
| 083. யா/ச/2244 | திரு.ஆசைப்பிள்ளை அருள்துரை |
| 084. யா/ச/2261 | திரு.வேலுப்பிள்ளை நடேசு |
| 085. யா/ச/2264 | திருமதி மங்களம் சமதக்கினி |
| 086. யா/ச/2282 | திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம் |
| 087. யா/ச/2290 | திருமதி ஞானாம்பிகை வரதராசா |
| 088. யா/ச/2299 | திரு.நாகன் வீரபத்திரன் |
| 089. யா/ச/2334 | திரு.முத்து சங்கரப்பிள்ளை |
| 090. யா/ச/2403 | திரு.சோமசுந்தரம் சிவகுமாரன் |
| 091. யா/ச/2435 | திரு.முத்து தங்கராசா |
| 092. யா/ச/2437 | செல்வி.இராசேஸ்வரி கனகசபை |
| 093. யா/ச/2464 | திரு.கந்தசாமி சபாநாயகம் |
| 094. யா/ச/2516 | திரு.இராஜரட்ணம் முத்துச்சிவராஜா |
| 095. யா/ச/2532 | திரு.சிவசுப்பிரமணியம் சண்முகானந்தன் |
| 096. யா/ச/2587 | திரு.இராமநாதன் சிவராசா |
| 097. யா/ச/2588 | திருமதி பரமேஸ்வரி சிவபாதசுந்தரம் |
| 098. யா/ச/2641 | திரு.வயிரவன் செபமாலை |
| 099. யா/ச/2753 | திருமதி நாகேஸ்வரி ஆறுமுகசாமி |
| 100. யா/ச/2785 | செல்வி.சிவாநந்தி பரமசிவம் |
| 101. யா/ச/2917 | திரு.பொன்னம்பலம் அப்புலிங்கம் |
| 102. யா/ச/2960 | திருமதி மனோரஞ்சிதமலர் இராசவல்லவன் |
| 103. யா/ச/3051 | திருமதி கனகம் வேலும்மயிலும் |
| 104. யா/ச/3064 | திருமதி அன்புமலர் ஜீவகாருண்யன் |
| 105. யா/ச/3090 | திரு.கதிரவேலு சந்திரராசா |
| 106. யா/ச/3120 | திரு.கந்தையா பத்மசாமி |
| 107. யா/ச/3132 | திரு.சடாச்சரசர்மா பத்மநாதன் |
| 108. யா/ச/3145 | திருமதி தேவமலர் பாலசுப்பிரமணியம் |
| 109. யா/ச/3161 | திரு.முருகுப்பிள்ளை சச்சிதானந்தசிவம் |
| 110. யா/ச/3189 | திரு.நவரத்தினம் இளங்கோவன் |
| 111. யா/ச/3205 | திரு.கந்தையா வேலுப்பிள்ளை |
| 112. யா/ச/3217 | திருமதி இன்பம் முருகானந்தசிவம் |
| 113. யா/ச/3327 | திரு.கந்தையா அம்பலவாணர் |
| 114. யா/ச/3330 | திரு.தருமலிங்கம் துரைலிங்கம். |
| 115. யா/ச/3374 | திருமதி தனேஸ்வரி அரியரத்தினம் |
| 116. யா/ச/3451 | திரு.இராமலிங்கம் நடராசா |
| 117. யா/ச/3616 | திரு.நாகரத்தினம் சண்முகநாதன் |
| 118. யா/ச/3665 | திரு.கந்தஞானியர் ஞானசம்பந்தர் |
| 119. யா/ச/3731 | திரு.மருதப்பா பாலசிங்கம் |
| 120. யா/ச/3777 | திருமதி வசந்தாதேவி தனசீலன் |
| 121. யா/ச/3919 | திரு.சிவகுரு சந்திரசேகரம் |
| 122. யா/ச/3961 | செல்வி.அரியலதா சிவப்பிரகாசம் |
| 123. யா/ச/3971 | திரு.விசுவலிங்கம் வரதராசா |
| 124. யா/ச/3973 | திருமதி சுசிலகுமாரி சற்குணகுமார் |
| 125. யா/ச/3988 | திரு.மயில்வாகனம் சுதன் |
| 126. யா/ச/4015 | திரு.பெரியதம்பி தியாகராஜா |
| 127. யா/ச/4106 | திரு.சேனாதிராஜா செல்வராசா |
| 128. யா/ச/4115 | திரு.கந்தையா அருளானந்தம் |
| 129. யா/ச/4187 | செல்வி.தவச்செல்வி கனகரத்தினம் |
| 130. யா/ச/4188 | திருமதி மனோரஞ்சிதம் தவத்துரை |
| 131. யா/ச/4211 | திருமதி பத்மினி இராஜசேகரம் |
| 132. யா/ச/4220 | திரு.முருகேசு சிதம்பரநாதன் |
| 133. யா/ச/4250 | திரு.நமசிவாயம் முருகநாதன் |
| 134. யா/ச/4288 | திருமதி இராசாத்தியம்மா பாலசுப்பிரமணியம் |
| 135. யா/ச/4369 | திருமதி வடிவாம்பிகை சிவமுருகன் |
| 136. யா/ச/4415 | திருமதி பத்மராணி அழகசுந்தரம் |
| 137. யா/ச/4442 | திருமதி சிதம்பரேஸ்வரி தர்மலிங்கம் |
| 138. யா/ச/4472 | திரு.கதிர்காமநாதன் பத்மசீலன் |
| 139. யா/ச/4500 | திரு.இளையதம்பி மகேஸ்வரன் |
| 140. யா/ச/4538 | திரு.சதாசிவம் நமசிவாயம் |
| 141. யா/ச/4559 | திருமதி சந்திராவதி இன்பலோவன் |
| 142. யா/ச/4567 | திரு.சுப்பிரமணியம் பரமநாதன் |
| 143. யா/ச/4571 | திருமதி பத்மவதனி நவரத்தினராசா |
| 144. யா/ச/4605 | திருமதி நேசரத்தினம் கனகசபை |
| 145. யா/ச/4623 | திருமதி பரமேஸ்வரியம்மா தர்மரத்தினம் |
| 146. யா/ச/4664 | திரு.ஆறுமுகம் மகாராசா |

**கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு**

| | |
|---|---|
| 001. யா/க/20 | திருமதி கௌரி பாலசிங்கம் |
| 002. யா/க/32 | திரு வல்லிபுரம் இராசதுரை |
| 003. யா/க/53 | திருமதி சிதம்பரம் இராசசிங்கம் |
| 004. யா/க/55 | திருமதி விமலாதேவி சர்வானந்தம் |
| 005. யா/க/113 | செல்வி. விமலாதேவி கார்த்திகேசு |
| 006. யா/க/121 | திருமதி சிவயோகமலர் லீலாரத்தினம் |
| 007. யா/க/128 | திருமதி ரேவதி தேவானந்தன் |
| 008. யா/க/154 | திரு. வல்லி மதியழகன் |
| 009. யா/க/161 | திருமதி நீலாம்பிகை பாலசுப்பிரமணியம் |
| 010. யா/க/206 | திருமதி யோகநாயகி புஸ்பராஜா |
| 011. யா/க/289 | செல்வி. ஜெயராணி கிருஸ்ணபிள்ளை |
| 012. யா/க/307 | திரு. கிருஸ்ணன் இராசரத்தினம் |
| 013. யா/க/324 | திருமதி கமலாதேவி கனகசிங்கம் |
| 014. யா/க/336 | திருமதி லீலாவதி தர்மலிங்கம் |
| 015. யா/க/347 | திருமதி தெய்வானை வீரகத்தி |
| 016. யா/க/358 | திரு. முருகேசு கந்தசாமி |
| 017. யா/க/381 | திருமதி செல்லம்மா சதாசிவம் |
| 018. யா/க/402 | திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம் |
| 019. யா/க/417 | திரு இராமலிங்கம் பஞ்சராசா |
| 020. யா/க/418 | திருமதி சரஸ்வதி மகாலிங்கம் |
| 021. யா/க/422 | திருமதி வேதநாயகமலர் தில்லைநாதன் |
| 022. யா/க/438 | செல்வி வித்தியா செல்வராஜா |
| 023. யா/க/440 | திருமதி இலட்சுமி இராமநாதன் |
| 024. யா/க/471 | திருமதி சின்னத்தங்கம் கிருஸ்ணபிள்ளை |
| 025. யா/க/502 | திருமதி கமலகுமாரி சிவசுப்பிரமணியம் |
| 026. யா/க/511 | திருமதி பூரணம் இளையதம்பி |
| 027. யா/க/517 | திருமதி தவமணி இராஜநாயகம் |
| 028. யா/க/527 | திரு. பொன்னையா பழனிமலை |
| 029. யா/க/535 | திரு. செல்வன் இராசேந்திரம் |
| 030. யா/க/586 | செல்வி. கிருஷ்ணகுமாரி மாணிக்கவாசகர் |
| 031. யா/க/600 | திருமதி இந்திராணி மகேந்திரநாதன் |
| 032. யா/க/663 | செல்வி. இராஜினி உலகநாதன் |
| 033. யா/க/673 | திரு. சிற்றம்பலம் தங்கத்துரை |
| 034. யா/க/685 | திரு.சபாரத்தினக்குருக்கள் வரதராசக்குருக்கள் |
| 035. யா/க/718 | திரு. மயில்வாகனம் மகேந்திரராசா |
| 036. யா/க/745 | திருமதி சிவபாக்கியம் இராசையா |
| 037. யா/க/771 | திருமதி இராசேஸ்வரி ஜெயரட்ணம் |
| 038. யா/க/792 | திருமதி இலட்சுமி இராசேந்திரன் |
| 039. யா/க/815 | திரு. தம்பையா மயில்வாகனம் |
| 040. யா/க/829 | திரு. கனகசிங்கம் பரமேஸ்வரன் |
| 041. யா/க/834 | திருமதி சரஸ்வதி நமசிவாயம் |
| 042. யா/க/896 | திரு. செல்லத்தம்பி சுதாஸ்கரன் |
| 043. யா/க/914 | திரு. பொன்னையா இராசரத்தினம் |
| 044. யா/க/921 | செல்வி. நவமாலா நவரட்ணம் |
| 045. யா/க/924 | திரு. சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் |
| 046. யா/க/934 | திருமதி சரஸ்வதி இரத்தினசிங்கம் |
| 047. யா/க/954 | திருமதி பூரணலீலா கிருஸ்ணபிள்ளை |
| 048. யா/க/959 | திருமதி சிவமதி தவச்செல்வன் |
| 049. யா/க/990 | திருமதி தங்கம்மா நமசிவாயம் |
| 050. யா/க/1027 | திருமதி சௌந்தரநாயகி விஷ்ணுனந்த மூர்த்தி |
| 051. யா/க/1032 | திரு. அம்பலவி ஆழ்வார் |
| 052. யா/க/1035 | திருமதி செல்வமலர் செல்வராசா |
| 053. யா/க/1084 | திரு. செல்லையா விஜயரட்ணம் |
| 054. யா/க/1109 | திரு. கார்த்திகேயக்குருக்கள் சபாரத்தின சர்மா |
| 055. யா/க/1129 | திருமதி புவனேஸ்வரி ஆனந்தராஜா |
| 056. யா/க/1133 | திருமதி கலாநிதி கருணாகரன் |
| 057. யா/க/1184 | திருமதி தங்கம்மா ஏரம்பமூர்த்தி |
| 058. யா/க/1267 | திரு. கதிரிப்பிள்ளை செல்லத்தம்பி |
| 059. யா/க/1291 | திரு. செல்லத்துரை இராஜேந்திரம் |
| 060. யா/க/1322 | திரு. காசிப்பிள்ளை கந்தசாமி |
| 061. யா/க/1575 | திருமதி சகுந்தலாதேவி சண்முகலிங்கம் |
| 062. யா/க/1595 | திருமதி காந்திமலர் அருணாசலம் |
| 063. யா/க/1725 | திருமதி பஞ்சமணி மயில்வாகனன் |
| 064. யா/க/1800 | திரு. ஜோர்ச்தம்பு புஸ்பராசா |
| 065. யா/க/1811 | திரு. பொன்னம்பலம் கனகசபாபதி |
| 066. யா/க/1814 | திரு. நல்லையா வைத்தியநாதன் |
| 067. யா/க/1879 | திரு. சின்னையா நடராசா |
| 068. யா/க/1899 | திருமதி விவேகமணி இராசநாயகம் |
| 069. யா/க/1950 | திருமதி மங்கயற்கரசி சிவசுப்பிரமணியம் |
| 070. யா/க/1980 | திருமதி வள்ளிப்பிள்ளை பரமகுரு |
| 071. யா/க/2042 | திருமதி நேசமலர் பாலேந்திரன் |
| 072. யா/க/2106 | திரு. கொழுந்து குணசிங்கம் |
| 073. யா/க/2146 | திரு. விசுவலிங்கம் இரத்தினசிங்கம் |
| 074. யா/க/2151 | திருமதி கமலவதனா குலபாலசிங்கம் |
| 075. யா/க/2166 | திரு.கணபதி சேனாதிபதி |
| 076. யா/க/2184 | திருமதி விமலாதேவி தவநேசன் |
| 077. யா/க/2248 | திரு.இளையதம்பி ஆறுமுகம் |
| 078. யா/க/2300 | திரு.நல்லதம்பி கதிரவேலு |
| 079. யா/க/2303 | திருமதி சிவயோகராணி சிறீதரன் |
| 080. யா/க/2307 | திரு.சுப்பையா கனகலிங்கம் |
| 081. யா/க/2432 | திருமதி மனோன்மணி இராசா |
| 082. யா/க/2480 | செல்வி. தங்கேஸ்வரி தம்பையா |
| 083. யா/க/2487 | திருமதி சிவகாமி இராமச்சந்திரன் |
| 084. யா/க/2653 | திருமதி நளினி அருந்தவராஜா |
| 085. யா/க/2672 | திரு.பொன்னையா துரையப்பா |
| 086. யா/க/2691 | திருமதி பகவதி சிவநேசன் |
| 087. யா/க/2703 | திரு.செல்வநாயகம் நவரத்தினம் |
| 088. யா/க/2711 | திரு.கணபதிப்பிள்ளை ஆனந்தசிவம் |
| 089. யா/க/2721 | திரு.சுப்பிரமணியம் யோகசிங்கம் |
| 090. யா/க/2791 | திரு.கந்தையா முத்துரத்தினம் |
| 091. யா/க/2816 | திரு.கந்தையா செனகரத்தினம் |
| 092. யா/க/2841 | திருமதி சிவாஜினிதேவி ஜெகதவப்பிரதாபன் |
| 093. யா/க/2871 | திரு.வேலன் முருகேசு |
| 094. யா/க/2912 | திரு.செல்லத்துரை சபாநாயகம் |
| 095. யா/க/2932 | திரு.நாகலிங்கம் இராஜேஸ்வரன் |
| 096. யா/க/2944 | திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை |
| 097. யா/க/3067 | செல்வி.வசந்தினி கதிரவேலு |
| 098. யா/க/3078 | திரு.செல்லையா பாலசுந்தரம் |
| 099. யா/க/3080 | திருமதி பார்வதி சுப்பிரமணியம் |
| 100. யா/க/3181 | திரு.கந்தையா சிதம்பரப்பிள்ளை |
| 101. யா/க/3191 | திருமதி பரமேஸ்வரி கணேஸ் |
| 102. யா/க/3224 | திரு.கார்த்திகேசு இராசையா |
| 103. யா/க/3270 | திரு.கணேசநாதன் தில்லைநாதன் |
| 104. யா/க/3531 | திருமதி கௌரிதேவி தவனேஸ்வரராசா |
| 105. யா/க/3536 | திருமதி தேவேஸ்வரி மார்க்கண்டு |
| 106. யா/க/3445 | திருமதி சிவபாக்கியம் நாகமுத்து |
| 107. யா/க/3550 | திரு.குட்டித்தம்பி கனகலிங்கம் |
| 108. யா/க/3590 | திரு.வைத்திலிங்கம் தவராசா |
| 109. யா/க/3697 | திரு.இராசா தருமலிங்கம் |
| 110. யா/க/3810 | திரு.தம்பு தேவராசா |
| 111. யா/க/3876 | திரு.சிற்றம்பலம் சுந்தரலிங்கம் |
| 112. யா/க/3951 | திரு.பொன்னுத்துரை மனோகரன் |
| 113. யா/க/4012 | திரு.தாமோதரம்பிள்ளை சண்முகலிங்கம் |
| 114. யா/க/4033 | திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம் |
| 115. யா/க/4075 | திருமதி வசந்தகுமாரி இரத்தினபாலா |
| 116. யா/க/4153 | திருமதி செல்லம்மா ஐயாத்துரை |
| 117. யா/க/4190 | திருமதி சாந்தினி சிவப்பிரகாசம் |
| 118. யா/க/4319 | திரு.மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் |
| 119. யா/க/4347 | திருமதி நல்லம்மா பொன்னம்பலம் |
| 120. யா/க/4394 | திருமதி மகேஸ்வரி ஏரம்பு |
| 121. யா/க/4540 | திரு.மாணிக்கம் தியாகராசா |
| 122. யா/க/4563 | திருமதி சோதீஸ்வரி செல்வராஜன் |
| 123. யா/க/4599 | திருமதி புனிதமலர் சிறிதரன் |
| 124. யா/க/4631 | திரு.இராமலிங்கம் குமாரசாமி |
| 125. யா/க/4656 | திரு.குழந்தையன் கந்தசாமி |
| 126. யா/க/4773 | திரு.இலங்கையன் வியாகன் |
| 127. யா/க/4791 | திரு.விஸ்வலிங்கம் செல்வராஜா |
| 128. யா/க/4821 | திருமதி செல்லம்மா கந்தசாமி |
| 129. யா/க/4949 | திரு.ஆழ்வாப்பிள்ளை நடராஜா |
| 130. யா/க/4956 | திரு.அப்பையா நடராசா |
| 131. யா/க/4962 | இரத்தினம் பாலசுப்பிரமணியம் |
| 132. யா/க/5002 | திரு.தம்பிராஜா அருச்சுனன் |
| 133. யா/க/5019 | திரு.குட்டியன் சின்னக்கிளியன் |
| 134. யா/க/5082 | திருமதி இராசமலர் விஜயகுமார் |
| 135. யா/க/5084 | திருமதி இராசம்மா கிருஷ்ணபிள்ளை |
| 136. யா/க/5190 | திருமதி சின்னப்பிள்ளை சின்னத்துரை |
| 137. யா/க/5260 | திருமதி பாக்கியம் பரமானந்தம் |

**வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு**

| | |
|---|---|
| 001. யா/வ/க/1 | திரு.கணபதிப்பிள்ளை நாகலிங்கம் |
| 002. யா/வ/க/7 | திரு.யாக்கோப்பு சந்தியோகு |
| 003. யா/வ/க/40 | திரு.சங்கரப்பிள்ளை சோமசுந்தரம் |
| 004. யா/வ/க/78 | திருமதி நாகேஸ்வரி சந்திரபாலன் |
| 005. யா/வ/க/107 | திரு.ஏபிரகாம் வினாசித்தம் பொன்னு |
| 006. யா/வ/க/153 | திரு.ஆசிர்வாதம் யோசேப் |
| 007. யா/வ/க/223 | திரு.தம்பாபிள்ளை சந்திரசேகரம் |
| 008. யா/வ/க/302 | திரு.தணிகாசலம் தர்மதாஸ் |
| 009. யா/வ/க/332 | திரு.கயித்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| 010. யா/வ/க/524 | திரு.கணபதிப்பிள்ளை முருகேசு |
| 011. யா/வ/க/603 | திரு.சோமசுந்தரம் குணசீலன் |
| 012. யா/வ/க/617 | திரு.செஸ்லஸ் யஸ்ரஸ் லெஸ்லி |
| 013. யா/வ/க/740 | திரு.மோசெஸ் சூசைப்பிள்ளை |
| 014. யா/வ/க/750 | திரு.சின்னையா தம்பிஐயா |
| 015. யா/வ/க/779 | திரு.கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார் |
| 016. யா/வ/க/800 | திரு.கௌரியல் மேரிறோஸ் பெர்னாண்டோ |
| 017. யா/வ/க/822 | திரு.முருகேசு ஜெகநாதன் |
| 018. யா/வ/க/860 | திரு.கணபதி முருகன் |

**சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு**

| | |
|---|---|
| 001. யா/சா/2 | திருமதி இராசமணி சிவபாதம் |
| 002. யா/சா/5 | திரு.விஜயரத்தினம் யோககுமார் |
| 003. யா/சா/6 | திருமதி இராசேஸ்வரி பொன்கலதாசன் |
| 004. யா/சா/13 | திரு.கந்தசாமி நவரத்தினம் |
| 005. யா/சா/57 | செல்வி.புஸ்பலதா முத்தையா |
| 006. யா/சா/66 | திருமதி தில்லைநாயகி மகேஸ்வரா |
| 007. யா/சா/80 | திரு.செல்லப்பா நடராசா |
| 008. யா/சா/109 | திருமதி சிவபாக்கியம் கந்தப்பிள்ளை |
| 009. யா/சா/116 | செல்வி.வரதலட்சுமி கார்த்திகேசு |
| 010. யா/சா/124 | திருமதி சறோஜினிதேவி மனோகரன் |
| 011. யா/சா/136 | செல்வி.றோஸ் செல்வநாயகம் |
| 012. யா/சா/244 | திருமதி சந்திரமலர் வீரசிங்கம் |
| 013. யா/சா/290 | திரு.அம்பலவாணர் தம்பிஐயா |
| 014. யா/சா/309 | திருமதி தேவநாயகி செல்வராசா |
| 015. யா/சா/336 | திரு.சுந்தரம் சிவராசா |
| 016. யா/சா/393 | திரு.தம்பு சுப்பிரமணியம் |
| 017. யா/சா/440 | திரு.சின்னவன் சிவலிங்கம் |
| 018. யா/சா/450 | திரு.சபாரத்தினம் தியாகராசா |
| 019. யா/சா/477 | திருமதி இலட்சுமிப்பிள்ளை வாமதேவன் |
| 020. யா/சா/480 | திருமதி கலாராணி துஜியேந்திரா |
| 021. யா/சா/510 | திரு.அபூர்வசிங்கம் ஸ்ரீகாந்தா |
| 022. யா/சா/558 | திரு.தம்பிராசா துரைராசா |
| 023. யா/சா/569 | திரு.இராமசாமி துரைசிங்கம் |
| 024. யா/சா/593 | திருமதி ஜெயந்தினி அரியஜெயம் |
| 025. யா/சா/620 | திருமதி தங்கரத்தினம் மகாலிங்கம் |
| 026. யா/சா/634 | திருமதி புவனேஸ்வரி சிவகுரு |
| 027. யா/சா/641 | திருமதி சின்னத்தம்பி மாணிக்கம் |
| 028. யா/சா/650 | திரு.பத்மநாதன் பத்பசீலன் |
| 029. யா/சா/718 | திருமதி தங்கமுத்து பொன்னம்பலம் |
| 030. யா/சா/739 | திருமதி சாந்தி சுகுணேஸ்வரன் |
| 031. யா/சா/758 | திருமதி சிவகாமிப்பிள்ளை தில்லைநாதர் |
| 032. யா/சா/799 | திரு.செல்வநாயகம் இராசன் |
| 033. யா/சா/807 | செல்வி.கோமதி சண்முகலிங்கம் |
| 034. யா/சா/848 | திருமதி இந்துமதி சிவனேசன் |
| 035.யா/சா/923 | திரு.செல்லப்பா சுப்பிரமணியம் |

**தொடர்ச்சி நாளை......**

# சந்தைப் பொருளாதார கட்டமைப்பை நோக்கி விரைவாக நகர்ந்து வரும் சீனா

(பீக்கிங்)

சீனாவில் கம்யூனிசக் கட்சியில் புதிய தலைமுறையினரை உள்வாங்க ஏதுவாக தலைநகர் பீக்கிங்கில் 16வது தேசிய மாநாடு கடந்த 5 வருடங்களின் பின் நேற்று முன்தினத்திலிருந்து இம்மாதம் 16ம் திகதிவரை கூடவுள்ளது.

இம் மாநாட்டில் சீனாவின் கட்சியின் தலைமைப் பீடம் மாற்றப்படுவதோடு சீனாவின் பொருளாதாரக் கூட்டமைப்பிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய தேசிய மகாநாட்டில் தற்போதய தலைவர் ஜியாங் செமின் தொடக்கவுரையை 90 நிமிடங்கள் வரை நிகழ்த்தியுள்ளார். அவ்வுரையிலே, சோலிசக் கட்சியினையும் அதன் ஆட்சியையும் திறமையான சோசலிச சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக நவீன உபாயங்களை கையாளப் போவதாக ஜியாங்


சீன கம்யூனிஸ்ட் மாநாட்டில் தலைவர்கள்

செமின் தெரிவித்துள்ளார்.

புதிய கட்சியின் கட்டமைப்பில் சந்தைப் பொருளாதார அம்சங்களை எதிர்காலத்தில் கையாள்வது பற்றி சிந்திக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பொருளாதாரத்தை முதலாளித்துவ நோக்கிலான அம்சங்களில் மாற்றி அமைக்கும்போதும் சீனா எந்தவொரு மேற்கு நாட்டின் மாதிரிகளைப் பின்பற்றாது என உறுதியாக நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வகையில் சீனாவின் பொருளாதாரக் கொள்கை கடந்த 20 வருடங்களின் பின் பாரிய மாற்றத்தை நோக்கி நகர்வதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். அரச உடைமை தொழில் முயற்சிகள் பாரியளவில் மீள் கட்டமைப்பு முயற்சிக்குள் கொண்டு வரப்படவுள்ளது.

அத்துடன் தற்போதய தலைவர் ஜியாங் செமினின் தலைமைப் பதவிக்கு தற்போது உதவி ஜனாதிபதியாகவுள்ள ஹு ஜின்டோ வரவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கட்சியின் புதிய அரசியற்குழு அங்கத்தவர்களுக்கு இம்மாதம் 15ம் திகதி புதிய பதவிகள் வழங்கப்படவுள்ளன.

## உலகவலம்

### அமெரிக்க ஹெலிகள் தாக்குதல்


ஆப்கானில் அமெ.படை

(காபூல்)

ஆப்கானில் அரசபடைகளுக்கும் ஆயுதக்குழு ஒன்றுக்கும் இடையில் மூண்டுள்ள சண்டையில் முதற் தடவையாக அங்குள்ள அமெரிக்க இராணுவம் தலையிட்டுள்ளது.

நிலத்தகராறு ஒன்றினால் ஏற்பட்ட இந்த சண்டையில் அமெரிக்க ஹெலிகொப்டர்களும் பங்கு கொண்டதாக கூறப்படுகிறது.

# மிக் - 21 போர் விமானங்களுக்கு இந்திய விமானப்படை பிரியாவிடை


வீழ்ந்து நொருங்கிய மிக் - 21 போர் விமானம்

(புதுடில்லி)

இந்திய விமானப்படை தன் வசமுள்ள சோவியத் தயாரிப்பு மிக்-21 ரக போர் விமானங்களை கைவிடத் தீர்மானித்துள்ளது. இந்த ரக போர்விமானங்களில் 250 விமானங்கள் 1991 முதல் நடைபெற்ற விபத்துக்களில் சம்பந்தப்பட்டுள்ளன. இந்த விபத்துக்களில் 100 விமானிகளும் உயிரிழந்திருக்கின்றனர்.

மோசமான பாதுகாப்பு உபகரணங்கள் இருப்பதால்தான் இவ்விபத்துக்கள் நடைபெறுதவாக கூறப்படுகிறது. இதனால் இவ்விமானங்களை விமானப்படை வட்டாரங்களில் "பறக்கும் சவப்பெட்டிகள்" என அழைக்கத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய விமானங்களை கைவிடுவதான முடிவு கடந்த வெள்ளியன்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்சுக்கும் விமானப்படை உயர் அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் போது எடுக்கப்பட்டது. மிக் விபத்துக்களுக்கு காரணம் அதன் காலம்கடந்த தொழில் நுட்பமும் உதிரிப்பாகத் தட்டுப்பாடும்தான் எனக் கூறப்படுகிறது.

இந்திய விமானப்டை பிரிட்டனிடமிருந்து 'ஹோக்' ரக போர் விமானங்களை வாங்கத் திட்டமிட்டு வருகிறது.

# இஸ்ரேலியப் படையினரால் ஜிகாத் தளபதி சுட்டுக்கொலை

(டெல்அவிவ்)

மேற்குக்கரை நகரான ஜெனினில அதிகாலைவேளை இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இஸ்லாமிய ஜிகாத் போராளிக் குழுவின் மூத்த தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இயாட் சவோல்ஹா (32) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் இஸ்ரேலில் பயணிகள் பஸ்கள் மீது தாக்குதல் நடத்தியவர் என இஸ்ரேலிய இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது. உள்ளூர் நேரம் அதிகாலை 4 மணியளவில் இவர் தனது மனைவியுடன் தங்கியிருந்த வீட்டை இஸ்ரேலியப் படையினர் சுற்றி வளைத்துள்ளனர். அவரை வெளியே வருமாறு படையினர் கோரியபோதும் வீட்டினுள் இருந்து இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதில் இஸ்ரேலியப் படையினர் இருவர் காயமடைந்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஒரு மணிநேர துப்பாக்கிச் சூட்டில்


கொல்லப்பட்ட இயாட்

இயாட் கொல்லப்பட்டார். தமது பட்டியலில் முதலிடங்களில் இருந்த ஒருவரை கொன்றதையிட்டு இஸ்ரேலிய படை அதிகாரிகள் திருப்தி வெளியிட்டுள்ளனர். இயாட் இஸ்ரேலிய ஜிகாத் இராணுவப் பிரிவின் உயர் மட்டப் போராளி என பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


# யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு நமது ஈழநாட்டின் இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு

'நமது ஈழநாடு'

ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக

'நமது ஈழநாடு'

**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
- தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்

சனசமூக நிலையத்தின் பெயர் : ..............................

பதிவு இலக்கம் : ..............................

முகவரி : ..............................

நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை

இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர்

: ..............................

.............................. ..............................

தலைவர்/ செயலாளர் ஒப்பம் திகதி


# பின்லேடன் உயிரோடிருக்கிறார் இன்ரபோல் அறிவிப்பு

(பாரிஸ்)

அல்கொய்டா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லாடன் உயிருடன் இருப்பதாக சர்வதேச பொலிஸ் ஸ்தாபனமான இன்ரபோல் அறிவித்துள்ளது. இன்ரபோலின் தலைவர் ரோனால்ட் நொபின் பிரான்சிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே ஒசாமா உயிருடன் இருப்பதற்கான தடயங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஒசாமா அமெரிக்காவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் ஒரே நேரத்தில் தாக்குதல்களை நடாத்த திட்டமிட்டுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துவதா கவும் தற்பொழுது அல்கொய்டா அமைப்பின் நடுத்தரமான தாக்குதல்களான பாலித்தீவுத் தாக்குதல், செச்சினிய தாக்குதல்கள் போன்றவற்றை நடாத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்காலத்தில் அமெரிக்காவின் பொருளாதார இலக்குகள் மீதும் தாக்குதல் நடாத்த திட்டமிட்டுள்ளனர் என நொபின் தெரிவித்தார்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

அகவை மூன்றில்



பெயர் : மோ. நிருசன்

முகவரி: அராலி மத்தி, வட்டுக்கோட்டை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தடுக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கடற்தொழிலாளா கூட்டுறவு சங்கங்களின் சமாசம் மேற்படி வேண்டுகோள் அடங்கிய கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளது. இக்கடிதத்தின் பிரதி ஒன்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டநாட்களாக இந்திய மீனவர்கள் இலங்கையின் வட. கடல் பகுதிக்குள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக வட.கடலின் மீன்வளம் அழிவதுடன் உள்ளூர் மீனவர்களும் தொழில் செய்ய முடியாமல் உள்ளது. அத்துடன் அவர்களின் கடற்தொழில் உபகரணங்களையும் இந்திய மீனவர்கள் சேதப்படுத்தி விட்டுச் செல்கின்றனர். இந்நிலை தொடர்ந்தும் நீடித்தால் வட.கடலில் மீன்வளம் முற்றாக அழிந்துவிடும் என்றும் எனவே உடனடியாக இந்திய மீனவர்கள் எமது கடற்பிராந்தியத்தில் அத்துமீறி கடற்தொழில் செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் மேற்படி கடிதத்தின் மூலமாக பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளோம் என்று வடமாகாணக் கடற்தொழிலாளர்கள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார். ([illegible])

# புதிய ஜனநாயகக் கட்சி கூட்டம் தென்பகுதி உறுப்பினர்கள் வருகை

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்று நேற்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள சிற்றி ஹோலில இடம் பெற்றது.

இப் பொதுக்கூட்டத்திற்கு கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமை தாங்கினார். புதிய ஜனநாயகக் கட்சியின் நான்காவது தேசிய மாநாட்டையொட்டிய இப் பொதுக் கூட்டத்தில் சட்டத்தரணி இ.தம்பையா, சட்டத்தரணி சோ.தேவராஜா, க.தணிகாசலம், எஸ்.இராஜேந்திரன், க.கதிர்காமநாதன், எஸ்.பன்னீர் செல்வம், மு.தியாகராஜா ஆகியோர் உரையாற்றினார்கள். இப் பொதுக் கூட்டத்திற்கு நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கட்சி உறுபபினர்கள் வருகை தந்திருந்தனர்.

இப் பொதுக்கூட்டத்தில் நிரந்தர சமாதானத்தை நோக்கிய பேச்சு வார்த்தை, சுயநிர்ணய உரிமை அடிபபடையிலான சுயாட்சித் தீர்வை வலியுறுத்துதல், அந்நிய நலன்களுக்கான தலையீடுகளை நிராகரித்தல், ஏகாதிபத்திய உலகமயமாதல் - தாராளமயம்- தனியார் மயத்தை எதிர்த்தல், உழைக்கும் மக்கள் மீதான சகல ஒடுக்கு முறைகளையும் எதிர்த்தல், அமெரிக்காவின் உலக ஆதிக்கப் போர் வெறியை அம்பலப்படுத்துதல் போன்ற தீமானங்களும் இப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (க,லி)

# படகுகளை மீளப் பெறுமாறு கடற்தொழிலாளர் சங்கம் கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் இருந்து இடம்பெயாந்து சென்ற மக்கள் நாச்சிக்குடா, மன்னார் பகுதிகளிலிருந்து கடல் நீரேரியூடாகத் திரும்பியபோது குருநகர் பகுதியிலிருந்து படகுகளை எடுத்துச்செல்ல படையினர் தடைவிதித்திருந்தனர்.

இதனால் அவர்கள் கைவிட்டுச் சென்ற படகுகள் குருநகர் கடற்தொழிலாளர் சங்கத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. இவற்றை மீனவர்களிடம் மீள ஒப்படைக்கவுள்ளதாக கடற்தொழிலாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 25ம் திகதிக்கு முன்னர் படகுகளை மீளப்பெறாவிட்டால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈவினை ஆலயத்தில் சிங்கவாகனம் திருட்டு

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினை வடக்கு மீனாட்சியம்பாள் ஆலய சிங்கவாகனம் கடந்த வெள்ளிக்கிழமையன்று களவாடப்பட்டுள்ளது.

பழைமை வாய்ந்த இவ் ஆலயத்தின் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த இச் சிங்கவாகனம் திருட்டுப் போவதற்கு முதல் நாள் ஆலயத்தின் திருப்பணி உண்டியலும் உடைக்கப்பட்டு அதிலுள்ள பணமும் அபகரிக்கப்பட்டுள்ளது.

இத் திருட்டுக்கள் தொடர்பாக ஆலயப் பிரதமகுரு சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (83)

# இராச வீதிக்கு மின்வழங்க துரித கதியில் ஏற்பாடுகள்!

(உரும்பிராய்)

இராச வீதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் துரிதகதியில் நடைபெறுகின்றன. இதற்காக மின் கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்புக் கம்பிகளும் இணைக்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாலும், தை மாதம் தொடக்கம் கல்வியியற் கல்லூரி இவ்வீதியிலுள்ள புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளதாலும் மிக விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(84)

## சமூகமளிக்க கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சிக் கோட்ட அரசியல் பணிமனையில் நடைபெறவுள்ளது. தென்மராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## பாடசாலை மாணவருக்கான போட்டிகள்

(மீசாலை)

உலக இந்து மாநாட்டையொட்டி - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால், பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, பண்ணிசை ஆகிய போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவென மூன்று பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவாகள் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (25)

## புலிகள் ...

ஒன்பது பேர் கொண்ட குழுவினர் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுவர்.

உயர் பாதுகாப்பு வலயம், மக்களின் மீள்குடியமர்வு போன்ற விவகாரங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவிருக்கிறது. (03)

## ஈ.பி.டி.பி...

அழைத்துச்சென்று மறைத்து வைத்துள்ளார். நேற்றுக் காலை அப்பெண் தன் தாயாருடன் அந்நபர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று உணவு கொடுத்து விட்டுத் திரும்பி விட்டார். பின்னர் மீண்டும் மதிய உணவை எடுத்துக் கொண்டு நேற்று நண்பகல் அவ்வீட்டிற்கு சென்ற போது வீட்டின் கதவு மூடப்பட்டிருந்ததாகவும் எவ்வித நடமாட்டத்தையும் காணவில்லை ஏன்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதியில் இவர்கள் கதவை உடைத்து உட்சென்று பார்த்தபோது புஷ்பராஜா சடலமாகக் கிடக்கக் காணபபட்டார். சடலத்தை பின்னர் ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் படகில் எடுத்துச் சென்று நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

புஷ்பராஜா எவ்விதமாக இறந்தார் என்பது மர்மமாக இருந்து வருகின்றது.

இச் சம்பவத்தினால் அனலை தீவில் பதற்றம் நிலவுகிறது. (க)

## கொழும்பின்...

ஞருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

இவர் மீதான வழக்கைச் சட்டமா அதிபர் விலக்கிக் கொண்டதையடுத்தே மேல் நீதிமன்ற நீதிபதி இந்த இளைஞரை விடுதலை செய்துள்ளார்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழ் தவறவிட்டோர் கருத்திற்கு

## தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2002

தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழைத் தவறவிட்டோர், 2002 ஆம் ஆண்டிற்கான மீட்பு நிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்க்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2002ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலை பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| **12.11.02 (செவ்வாய்)** | | | |
| அரசியல்துறைச் செயலகம்,வடலியடைப்பு | காலை - | 08.00 | - 11.00 |
| அரசியல்துறைச் செயலகம்,சண்டிலிப்பாய் | ந.ப - | 12.00 | - 2.00 |
| சோதி வேம்படி மகளிர் கல்லூரி,மானிப்பாய் | பி.ப - | 3.30 | - 4.30 |
| **13.11.02 (புதன்)** | | | |
| அரசியல்துறைச் செயலகம்,சுன்னாகம் | காலை - | 8.00 | - 10.00 |
| அரசியல்துறைச் செயலகம்,நீர்வேலி | மு.ப - | 11.00 | - 1.30 |
| மங்கயற்கரசி மகாவித்தியாலயம்,நல்லூர் | பி.ப - | 2.30 | - 4.30 |
| **14.11.02 (வியாழன்)** | | | |
| அரசியல்துறைச் செயலகம்,வல்வெட்டித்துறை | காலை - | 8.00 | - 9.30 |
| அரசியல்துறைச் செயலகம் -தம்பசிட்டி | மு.ப - | 10.30 | - 1.30 |
| அரசியல்துறைச் செயலகம்,வதிரி - கரவெட்டி | பி.ப - | 2.30 | - 4.00 |
| **15.11.02 (வெள்ளி)** | | | |
| அரசியல்துறைச் செயலகம்,கைதடி | காலை - | 8.00 | - 9.00 |
| அரசியல்துறைச் செயலகம்,சங்கத்தானை | மு.ப - | 10.00 | - 12.30 |
| அரசியல்துறைச் செயலகம்,கொடிகாமம் | பி.ப - | 1.30 | - 3.00 |
| **16.11.02 (சனி)** | | | |
| அரசியல்துறைச் செயலகம்,வேலணை | காலை - | 8.00 | - 9.00 |
| வீரசிங்கம் மண்டபம்,யாழ்ப்பாணம் | மு.ப - | 11.00 | - 2.30 |
| **17.11.02 (ஞாயிறு)** | | | |
| மத்திய கல்லூரி, கிளிநொச்சி | காலை - | 8.00 | - 12.00 |

மக்கள் வங்கி
அனுசரணையுடன்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை
மாபெரும் கருத்தரங்கு - 2002
எதிர்வரும் 19ஆம் திகதி
காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்
என மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
இக் கருத்தரங்கில் பங்கு பற்றிப் பயனடைய, பரீட்சையில் தோற்றும் மாணவமணிகளை நாமும் வரவேற்கின்றோம்! வாழ்த்துகின்றோம்!!
அனுசரணை :-
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
மக்கள் வங்கியின்
மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்குகள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.